Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MARCH 02, 2023

வியாழக்கிழமை மார்ச் 02, 2023 | ஒளி: 08 கதிர்: 220 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## மண்ணெண்ணெய் விலை குறைந்தது

355 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விலை, புதன்கிழமை (01) நள்ளிரவு முதல் அமலாகும் வகையில் 50 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்தது.

அதன்படி ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் புதிய விலையாக 305 ரூபாய் அறிவிக்கப்பட்டு உள்ளதுடன், பெற்றோல் மற்றும் டீசல் விலைகளில் எவ்வித மாற்றமும் இல்லை என்று கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மேலும், 464 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த தொழிற்றுறைகளுக்கு பயன்படுத்தும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 134 ரூபாயால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 330 ரூபாயாக அறிவிக்கப்பட்டுள்ளது.



ஒருநாள் போட்டி நேற்று

# டெஸ்ட் போட்டி இன்னும் வரவில்லை

- பணிப் புறக்கணிப்பில் பல சங்கங்கள் சங்கமம்
- வங்கிகள் முடக்கின; வாடிக்கையாளர்கள் தவித்தனர்
- ஆசிரியர்கள் கறுப்புடன் வந்து கற்பித்தனர்
- துறைமுக ஊழியர்கள் 24 மணி நேர வேலை நிறுத்தம்

தங்களது தொழிற்சங்க நடவடிக்கை ஒரு நாள் போட்டியை ஒத்தது என்றும் டெஸ்ட் போட்டி இன்னும் வரவில்லை என்றும் துறைமுக தொழிற்சங்கங்களின் இணை அழைப்பாளர் நிரோஷன் கோரகனகே தெரிவித்தார்.

அதிக வரி விதிப்பு, மின் கட்டண உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் தாமதம் ஆகியனவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து, நாடளாவிய ரீதியில் புதன்கிழமை (01) தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதன்போது, துறைமுக ஊழியர்கள் நேற்று காலை 7.00 மணி முதல் 24 மணி நேர வேலை நிறுத்தத்தை ஆரம்பித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை நிரோஷன் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்:

## மைத்திரி மனு நிராகரிப்பு

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களால் தாக்கல் செய்த பல சிவில் வழக்குகளில் இருந்து தன்னை விடுவிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை, மாவட்ட நீதிமன்றம் நிராகரித்தமையை சவாலுக்கு உட்படுத்தி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை, கொழும்பு சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம், புதன்கிழமை (01) நிராகரித்தது.

தொடர்ச்சி P2



35 வருடங்கள் சிறை: இலங்கையரின்

## விடுதலை விவகாரத்தை பரிசீலிக்கவும்

ஏறக்குறைய 35 வருடங்களாக சிறைவாசம் அனுபவித்து வரும் இலங்கை குற்றவாளியின் முன்கூட்டிய விடுதலை விவகாரத்தை மறுபரிசீலனை செய்யுமாறு தமிழ்நாடு அரசாங்கத்துக்கு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

இனியும் தாமதிக்காமல்

## சின்ன தேர்தலை நடத்த வேண்டும்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இனியும் தாமதிக்காமல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்த வேண்டும் என்று அமெரிக்க செனட் சபையின் வெளியுறவு குழு, இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2



## மக்களை தவறான திசையில் வழிநடத்தும் எதிர்க்கட்சிகள்

### நாட்டுக்கு ஆபத்தாக முடியும் என்கிறார் கல்வி இராஜாங்க அமைச்சர்

எதிர்காலம் தொடர்பில் மக்களை சிந்திக்க விடாது தடுக்கும் சில தரப்பினர், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் என்ற பெயரில் அப்பாவி மக்களை அசௌகரியப்படுத்தி அவர்களை தவறாக வழிநடத்திக் கொண்டிருப்பது எதிர்காலத்துக்கு மிகப்பெரிய ஆபத்தாக முடியப்போகிறது. எனவே இவ்விடயத்தில் நாட்டு மக்கள் தெளிவடைய வேண்டும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சிறுமி துஷ்பிரயோகம்; தேரரை தேடி வேட்டை

எட்டு வயதான சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் 70 வயதான தேரரை கைது செய்வதற்கான விசாரணைகளை ஹெட்டிப்பொல பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

சந்தேகநபரான அந்தப் பௌத்த தேரர், இரண்டு மாதங்களாக அந்தச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி வந்துள்ளமை விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. அந்தப் பௌத்த தேரர், ஹெட்டிப்பொல விஹாரையில் தங்கியிருப்பவர் என்றும். எனினும், தற்போது தலைமறைவாகிவிட்டார் என்றும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## 108 வழக்குகளில் இருந்து ஜனாதிபதி விடுவிப்பு

ஈஸ்டர் தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் தாக்கல் செய்த 108 வழக்குகளில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விடுவிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்ற மேலதிக மாவட்ட நீதிபதி மகேஷா டி சில்வா, புதன்கிழமை (01) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## RTI விதிகள் எம்.பி மாருக்கும் பொருந்தும்

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI) விதிகள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொருந்தும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், தங்களுடைய சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவிக்க வேண்டும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை (28) தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சம்பத் அபயகோன், பி. குமாரரத்தினம் ஆகிய இரு நீதியரசர்கள் அடங்கிய அமர்வே இந்தத் தீர்ப்பை அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## பேராதனை பல்கலைக்கழக பொறியியல் மாணவி மரணம்

பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் இறுதியாண்டில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் அளவுக்கு அதிகமான வீரியமுள்ள மருந்து ஒன்றை உட்கொண்டதால் உயிரிழந்துள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது. செவ்வாய்க்கிழமை (28) இரவு, பேராதனைப் பல்கலைக்கழக மலலசேகர மாணவர் விடுதியில் தங்கியிருந்த சில மாணவர்கள் சுகவீனமுற்றிருந்ததை ஏனைய மாணவர்கள் அவதானித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## கட்டண உயர்வுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

தனது அனுமதியின்றி அண்மையில் மின்சார கட்டணத்தை உயர்த்தியமை குறித்து எதிர்வரும் இரண்டு நாள்களில் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

தனது அலுவலகத்துக்கு விஜயம் செய்த அவர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது, தனிப்பட்ட முறையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## ரூ. 2 இலட்சமாக வரி வரம்பை அதிகரிக்க வேண்டும்

அரசாங்கம் தற்போது நடைமுறைப்படுத்தி உள்ள ஒரு இலட்சம் ரூபாய் வரி வரம்பை, உடனடியாக குறைந்தது இரண்டு இலட்சமாக அதிகரிப்பதன் மூலம் நடுத்தர வர்க்கத்தை பாதுகாக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன வலியுறுத்தினார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் புதன்கிழமை (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## 10 அமைச்சர்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் தீர்மானம்

தான் உட்பட 10 புதிய அமைச்சரவை அமைச்சர்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார். இந்த மாதத்தில் புதிய நியமனங்கள் குறித்து அறிவிக்கப்படும் என்று தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் இதைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## மைத்திரி, தயாசிறிக்கு எதிராக தடையுத்தரவு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சியின் செயலாளர் நாயகம் தயாசிறி ஜயசேகர ஆகியோருக்கு எதிராக கொழும்பு சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம், புதன்கிழமை (01) இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்தது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளில் இருந்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை தடுக்கும் வகையில் இந்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## அமெ. டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி உயர்வு




இலங்கை மத்திய வங்கியால் புதன்கிழமை (01) வெளியிட்ட நாணய மாற்று விகிதத்துக்கு அமைய அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி சாதனை உயர்வை எட்டியுள்ளது. அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 351.72 ரூபாயாகவும் விற்பனை விலை 362.95 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது.

2022ஆம் ஆண்டு மே 4ஆம் திகதிக்கு பின்னர் பதிவாகிய அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் குறைந்த பெறுமதி என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# நாயை இரை தேடிய சிறுத்தைக்கு மனிதனே இலக்கானான்

ரஞ்சித் ராஜபக்ஷ

நாயை வேட்டையாடுவதற்காக வந்த சிறுத்தையொன்று தாக்கியதில் கடும் காயங்களுக்கு உள்ளான தோட்டத் தொழிலாளி, டிக்கோயா - கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம், பொகவந்தலாவை, டின்சின் தோட்டத்தில் நேற்று (01) இடம்பெற்றுள்ளது.

அந்தத் தோட்டத்தின் தேயிலை தொழிற்சாலைக்கு அண்மையில் தேயிலைத் தோட்டத்துக்கு இரசாயன கலவையை தெளித்துக்கொண்டிருந்த தொழிலாளியின் மீதே, சிறுத்தை இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளது.

சம்பவ தினமான நேற்று (01) காலை 10 மணியளவில் அவருக்கு மிக அண்மையில் நாயொன்று அபாயக் குரல் எழுப்பியுள்ளது. அந்தத் திசையை நோக்கி தொழிலாளி சென்றுள்ளார். அப்போது தன்னுடைய பிடியிலிருந்த நாயை விட்டுவிட்டு, தொழிலாளியை அந்தச் சிறுத்தை பாய்ந்து தாக்கியுள்ளது.





தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மைத்திரி மனு நிராகரிப்பு

கொழும்பு சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதியரசர்களான பிராங்க் குணவர்தன மற்றும் சமத் மொராயஸ் ஆகியோர் அடங்கிய அமர்வு, 21 ஆயிரம் ரூபாய் கட்டணத்துக்கு உட்பட்டு மனுவை நிராகரிக்குமாறு உத்தரவிட்டது.

கொழும்பில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதிவாதிகள் பலரிடமிருந்து நட்டஈடு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் 108 வழக்குகளை தாக்கல் செய்துள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதலில் காயமடைந்த, நிரந்தர ஊனமுற்ற மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வழக்குகளையும் தள்ளுபடி செய்ய உத்தரவிடுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியிருந்தார்.

குறித்த வழக்குகளில் இருந்து தன்னை விடுவிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

2022 ஜனவரி 7அன்று, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் மேலதிக மாவட்ட நீதிபதி, முன்னாள் ஜனாதிபதியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி விண்ணப்பத்தை நிராகரித்தார்.

அதன் பின்னர், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கொழும்பு சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

## மைத்திரி, தயாசிறிக்கு எதிராக தடையுத்தரவு

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு, நீதியரசர்களான பிராங்க் குணவர்தன மற்றும் எம். பி. சமத் மொரேஸ் ஆகிய நீதியரசர்கள் கொண்ட அமர்வு முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த இடைக்கால உத்தரவை பிறப்பிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பதவிகளில் இருந்து தன்னை நீக்குவதைத் தடுக்கும் வகையில், மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுத்து, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தாக்கல் செய்த மனுவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் டிசெம்பர் 5ஆம் திகதி நிராகரித்தது.

இதனையடுத்தே மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தி கொழும்பு சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் நிமல் சிறிபால டி சில்வா மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்திருந்தார்.

# டெஸ்ட் போட்டி இன்னும் வரவில்லை

துறைமுக ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் இந்த வேலைநிறுத்தம் தினசரி நடவடிக்கைகளில் தாக்கம் மற்றும் தாமதத்தை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

40க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தம் காரணமாக பல வங்கிக் கிளைகள் மூடப்பட்டிருந்ததுடன், பல கிளைகளில் வங்கிகள் மூடப்படும் என்றும் ஏடிஎம் இயந்திரங்கள் மட்டுமே செயல்படும் என்றும் அறிவிப்பு ஒட்டப்பட்டது.

தமது தொழிற்சங்க உறுப்பினர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை மின்சார சபை சங்கம் தெரிவித்ததுடன், நாடளாவிய ரீதியில் உள்ள தொலைத்தொடர்பு ஊழியர்களும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலைகளுக்கு வருகை தரும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கறுப்புப் பட்டி அணிந்து வருமாறும், முடிந்தால் கறுப்பு உடை அணிந்து வருமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டமைக்கு அமைய ஆசிரியர்கள் கறுப்பு உடை அணிந்து பாடசாலைகளுக்கு வருகை தந்தனர்.

தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்த அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் நண்பகல் நடைபெறவுள்ள தொழிற்சங்கப் போராட்டத்தில் வைத்தியர்கள் பங்கேற்க உள்ளதாக அறிவித்தது. தொழிற்சங்க நடவடிக்கையில் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களும் பங்குபற்றியதுடன், உழைத்து சம்பாதித்த வருமானத்தின் மீதான வரியை நீக்கவும், வங்கிக் கடனுக்கான அதிக வட்டியை குறைக்கவும் அரசு தவறினால், அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கும் என பல்கலைக்கழக நிர்வாக அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் தலைவர்கள் நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் தமது ஊழியர்கள் பங்குகொள்ள மாட்டார்கள் என்று உறுதியளித்துள்ள போதிலும், குறிப்பாக வரி அதிகரிப்புக்கு எதிராக வங்கித் துறையினர் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## 108 வழக்குகளில் இருந்து ஜனாதிபதி விடுவிப்பு

இரண்டாவது பிரதிவாதியான ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் அரசியலமைப்பின் 35(1) வது சரத்தின் பிரகாரம் அவர் விடுதலைக்கு உரித்துடையவர் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

ஈஸ்டர் ஞாயிறு அன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததால், தாக்குதலில் காயமடைந்த, நிரந்தர ஊனமுற்ற மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்களால் தங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரி இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

தமது சேவை பெறுநர் தற்போது ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதால், அரசியலமைப்பின் கீழ் அவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என்று ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் பூர்வாங்க ஆட்சேபனையை முன்வைத்திருந்தனர்.

அதன் அடிப்படையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக தற்போது வழக்குத் தொடர முடியாது என்று மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்து, பின்னர் இந்த உத்தரவை பிறப்பித்தது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

மேற்குறிப்பிட்டவர்கள், பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்போவதாக புலனாய்வுத் தகவல் கிடைத்த போதிலும் உரிய நடவடிக்கை எடுக்காமையால் தங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு வழங்குமாறு முறைப்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.

## விடுதலை விவகாரத்தை பரிசீலிக்கவும்

மனுதாரர் விடுவிக்கப்பட்டவுடன் மீண்டும் இலங்கை செல்ல விரும்புவதாகக் குறிப்பிட்ட உச்ச நீதிமன்றம், அவர் அரசால் தீர்மானிக்கப்படும் பொருத்தமான இடைத்தங்கல் முகாமுக்கு மாற்றப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது.

2018 கொள்கையின் அடிப்படையில் மனுதாரரின் முன்கூட்டிய விடுதலையை மறுத்ததற்கு எதிராக மாநிலத்தின் 2021 ஆம் ஆண்டு உத்தரவை எதிர்த்து மனுதாரர் ராஜன் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த நீதியரசர்கள் அபய் எஸ். ஒகா மற்றும் ராஜேஷ் பிண்டல் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

மனுதாரர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, சுமார் 35 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்துள்ளார்.

முன்கூட்டிய விடுதலைக்கான மனுதாரரின் வேண்டுகோளை அரசு பரிசீலித்து நிராகரித்தது, அவர் செய்த குற்றத்தின் தீவிரம் மற்றும் இணை குற்றவாளிகளின் விசாரணைகள் பிரிக்கப்பட்டு, முன்கூட்டியே விடுதலை செய்வது நடத்தைக்கு இடையூறாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

## மக்களை தவறான திசையில்...

அரசியல் சமூக பொருளாதார ரீதியில் நம் நாடு பாரிய சவால்களை எதிர்கொண்டிருக்கின்றது. சர்வதேச நாடுகளினதும் சர்வதேச நிதி நிறுவனங்களினதும் அனுசரணைகளையும் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொள்வதற்கும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையிலே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவர்களுக்கான சீருடை விநியோக நிகழ்வானது கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் ஹீ ஷேன் ஹொங் ஆகியோரின் தலைமையில் கல்வி அமைச்சின் சப்புகஸ்கந்தையில் அமைந்துள்ள களஞ்சியசாலையில் இடம் பெற்றது.

பாடசாலை மாணவர்களுக்கு சீருடை விநியோகம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே கல்வி இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "அரசாங்கமானது எப்போதும் நாடு, மக்கள் மற்றும் எதிர்காலம் என்ற சிந்தனையில் செயல்படுகிறது. ஆனாலும் எதிர்த் தரப்பினரின் ஆரோக்கியமற்ற முன்னெடுப்புகள் அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முட்டுக்கட்டையாக அமைகின்றன.

எதிர்க்கட்சியினரின் ஆரோக்கியமான விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை என்பதை மறுக்கவில்லை. அதேநேரம் அரசாங்கமானது தனது கடமைப் பொறுப்பிலிருந்து விலகிச் சென்று விடவில்லை என்பதையும் இங்கு கூறி வைக்க வேண்டும். தற்போது நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாரிய கஷ்டங்களையும் இடையூறுகளையும் அனுபவித்து வருகின்றனர்.

இத்தகைய இடையூறுகளையும் கஷ்டங்களையும் களைவதற்கு பொருளாதாரத்தின் தன்மையை சீரமைத்து ஒருநிலைப் படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகிறது. யார் எதனைக் கூறினாலும் நம் நாட்டின் பொருளாதாரம் சீரமைக்கப்படும் பட்சத்திலேயே மக்கள் நிம்மதியாக வாழ முடியும்.

கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட இலவச சேவைகளையும் ஏனைய கட்டண சேவைகளையும் செம்மைப்படுத்த முடியும். அதேபோன்று அபிவிருத்திகளையும் எதிர்பார்க்க முடியும். அரசாங்கம் இவ்வாறு சிந்தித்து செயல்படுகின்ற இத் தருணத்தில் நாட்டை தொடர்ச்சியாக கொதிநிலையில் வைத்திருப்பதற்கு எதிர்க்கட்சிகள் கங்கணம் கட்டி செயல்பட்டால் நாடு பாரிய ஆபத்தையே எதிர்கொள்ளும்.

நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்தினதும் நிலை உணர்ந்து எதிர்க்கட்சிகள் தங்களது நிலைப்பாடுகளை பரிசீலனை செய்ய வேண்டும்.

நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும் என்பதையே அரசாங்கம் விரும்புகிறது என்றார்.

## RTI விதிகள் எம்.பி மாருக்கும் பொருந்தும்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிவிப்புச் சட்டத்தின் விதிகளுக்கு மேல் தகவலறியும் உரிமைச் சட்டம் மேலோங்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதன் மூலம் மக்கள் தங்கள் சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த அறிவிப்பின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை அறிய முடியும்.

"பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களால் பராமரிக்கப்படும் நபர்கள். அவர்கள் எல்லா நேரங்களிலும் நாட்டின் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, மற்றவர்கள் பின்பற்றுவதற்கு முன்மாதிரிகளை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சட்டத்தின் விதிகளின் கீழ், சட்டத்தின் விதிகளின் கீழ் வரும் எந்தவொரு நபரும், தேவையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் தொடர்புடைய அறிவிப்பை வழங்கத் தவறினால், அபராதம் அல்லது விளக்கத்துடன் கூடிய சிறைத்தண்டனையுடன் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்தவர்அல்லது அபராதம் மற்றும் சிறைத்தண்டனை இரண்டும் விதிக்கப்படும்" என நீதியரசர் அபேகோன் குறிப்பிட்டார்.

தனது சொத்துப் பத்திரங்களை ஒப்படைத்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான தகவல்களை தமக்கு வெளியிட வேண்டும் என தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி பாராளுமன்ற செயலாளர் நாயகம் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளருக்கு 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் எழுதிய கடிதத்தில், 2018 ஆம் ஆண்டில் அந்தந்த சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த அறிக்கைகளை ஒப்படைத்த எம்.பி.க்களின் பெயர் பட்டியலை பாராளுமன்றத்தின் தகவல் அதிகாரியிடம் ஊடகவியலாளர் சாமர சம்பத் கோரியிருந்தார்.

எவ்வாறாயினும், ஒகஸ்ட் 2018 இல் ஒரு கடிதத்தில் தகவல் அதிகாரி, 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சட்டத்தின்படி பாராளுமன்ற சபாநாயகருக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் கோரிக்கையை நிராகரித்திருந்தார். பாராளுமன்ற உறுப்பினர்களின் அறிவிப்புகளை நிர்வகிக்கும் ஒரு தனி சட்டம் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டிருந்தார்.

இந்த விவகாரம் நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட்டது, அங்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தற்போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவிப்புச் சட்டம் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விதிகள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பொருந்தும் என்று அறிவித்துள்ளது.

## ரூ. 2 இலட்சமாக வரி வரம்பை ...

அதிக வருமானம் ஈட்டுபவர்களின் வரி சதவீதத்தை அதிகரிப்பதன் மூலம் முன்மொழியப்பட்ட வருவாய் இழப்பை ஈடுசெய்ய முடியும் என்று அவர் பரிந்துரைத்தார்.

எனவே, 1 இலட்சம் ரூபாய் வரி வரம்பை உடனடியாக குறைந்தது 2 இலட்சமாக உயர்த்தி நடுத்தர வர்க்க ஊழியர்களைப் பாதுகாக்குமாறு ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

உழைக்கும் மக்கள் வருமானத்தை இழந்து பெரும் வரிச்சுமையால் மக்கள் வீதிக்கு வரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் இதனால் உணவுப் பாதுகாப்பின்மை, அதிகரித்த போஷாக்குக் குறைபாடு, நோய்களைத் தடுப்பது என்பன மக்களுக்குப் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

## 10 அமைச்சர்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் தீர்மானம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனக பண்டார, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன, காமினி லொகுகே, சரத் வீரசேகர, எஸ்.எம். சந்திரசேன, சி.பி. ரத்நாயக்க மற்றும் தானும் முன்மொழியப்பட்ட பெயர் பட்டியலில் அடங்குவதாக குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதிக்கு முன்மொழியப்பட்ட பெயர் பட்டியலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பியான நாமல் ராஜபக்ஷவின் பெயர் இடம்பெறவில்லை என்றும் திஸாநாயக்க தெரிவித்தார்.

குறித்த பட்டியல் ஏற்கனவே உரிய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் பட்டியலில் உள்ளவர்களை அமைச்சரவை அமைச்சர்களாக நியமிக்குமாறு பொதுஜன பெரமுன கோரிக்கை விடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## கட்டண உயர்வுக்கு...

30 முதல் 90 வரையிலான மின்சார அலகுகளைப் பயன்படுத்தும் குறைந்த வருமானம் கொண்ட 5 மில்லியன் மக்களுக்காக மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கட்டணமானது 250 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார். குறைந்த வருமானம் பெறுவோருக்கு நீதியை பெற்றுத் தருவதற்காக தனது சொந்த நிதியை பயன்படுத்தி நீதிமன்றத்துக்கு செல்வதாக தலைவர் குறிப்பிட்டார்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றுக்காக பல நாட்களாக வெளிநாட்டுக்கு சென்ற தாம் நாடு திரும்பிய போதும் தனது அலுவலகம் தனக்காக திறக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். அவர் அலுவலகத்துக்கு வருகை தந்த போது, அலுவலகத்துக்கு வைக்கப்பட்டிருந்த சீல் அகற்றப்பட வில்லை என்றும் கொள்ளுப்பிட்டி பொலிஸாருக்கு பின்னர் அறிவிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## அமெ. டொலருக்கு நிகரான ரூபாயின்...

செவ்வாய்க்கிழமை (28) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 357.68 ரூபாயாகவும் விற்பனை விலை 366.92 ரூபாயாகவும் பதிவாகி இருந்தது.

இதேவேளை, பெப்ரவரி 01ஆம் திகதி 371 ரூபாயாகக் காணப்பட்ட அமெரிக்க டொலரின் விற்பனை மார்ச் 01 ஆம் திகதியன்று 362.95 ரூபாயாக குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவின் பிரகாரம்இ கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**கம்பனியின் பழைய பெயர் :** கமகே ட்ரேடிங் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் புதிய பெயர் :** ஜனதா ஸ்டீல் டியூப் (பிரைவட்) லிமிட்டட்

**பதிவு அலுவலக முகவரி :** பல்லேகொடவத்த இண்டஸ்ரியல் வில்லேஜ், மீகம வீதி, மதுகம.

**கம்பனியின் இலக்கம்:** பீ வீ 102229

**மாற்றம் நிகழ்ந்த திகதி :** 23.02.2023

**டைரக்டர்**
**க்ரஸ்டன் கோர்பரேட் சேர்விசஸ் (பிவிடி) எல்டீடி**
**கம்பனி செயலாளர்கள்.**


## சின்ன தேர்தலை நடத்த வேண்டும்

இலங்கை மக்களின் குரலை நசுக்குவதற்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியும் ஜனநாயக விரோத செயற்பாடு என்று குழு வெளியிட்ட டுவிட்டர் பதிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மறுக்கமுடியாத ஜனநாயகமற்றது மற்றும் இலங்கையர்களின் உரிமைகளை நேரடியாக மீறுவதாகும் செனட் சபையின் வெளியுறவு குழு சுட்டிக்காட்டியுள்ளது.

## நாயை இரை தேடிய...

அங்கு பணியிலிருந்த ஏனைய தொழிலாளர்கள் எழுப்பிய சத்ததால், அந்த சிறுத்தை தப்பியோடிவிட்டது.

சம்பவத்தில் காயமடைந்த அவர், பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைளுக்காக டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். படுகாயமடைந்த நாய்க்கும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. இந்தத் தோட்டத்தில் செல்லப்பிராணிகளாக வளர்க்கப்படும் நாய்கள், கோழிகள் அடிக்கடி காணாமல் போவதாகவும் சிறுத்தைகளின் நடமாட்டம் இந்தத் தோட்டத்தில் அதிகமாகுமென தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## பேராதனை பல்கலைக்கழக...

பேராதனை போதனா வைத்தியசாலையில் இரவு 11 மணியளவில் அனுமதிக்கப்பட்ட குறித்த மாணவி சிகிச்சை பலனின்றி புதன்கிழமை (01) காலை உயிரிழந்துள்ளார்.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த வினோதி டி சில்வா என்ற மாணவியே உயிரிழந்துள்ளதாகவும் அவர் சில காலமாக மன அழுத்தத்தினால் சிகிச்சை பெற்று வந்தவர் எனவும் பேராதனை பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.



கம்பளை

# அரசாங்கத்தை எதிர்த்து...

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வரிக்கு எதிராகவும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறும், பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டமையை எதிர்த்தும் நாடளாவிய ரீதியில் நேற்று (01) கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

(தமிழ்மிரர் நிருபர்கள்)



பதுளை



மட்டக்களப்பு



வவுனியா



யாழ்ப்பாணம்



நீர்கொழும்பு



மூதூர்



திருகோணமலை



அக்கரைப்பற்று



மொனராகலை



ஹட்டன்



# The way home




சி.கதீசனா

ஊடக கற்கை (2ம் வருடம்), யாழ். பல்கலைக்கழகம்


இப் படமானது *dedicated to all the grand mothers*. இப் படத்தின் இயக்கம் எழுத்தாளர் லீ ஜியோங் ஹியாங் ஆவார். ஒளிப்பதிவு யூன் ஹியுங் சிக், மொழியானது தென் கொரியனாக காணப்படுகிறது. இசையமைப்பாளர் ஹிம் ஹீங் ஆகும். இத் திரைப்படமானது 2002 ஆம் ஆண்டு வெளியாகியது.

படத்தின் சிறப்பு பற்றி பார்க்கையில், சிறந்த படம் மற்றும் திரைக்கதைக்கான தென்கொரியாவின் ஆஸ்கார் விருதிற்கு இணையான விருதைப் பெற்றது. இது 2002ல் தென்கொரியாவில் இரண்டாவது அதிக வசூல் செய்த உள்நாட்டு திரைப்படமாகும். இந்த திரைப்படம் கிராண்ட் பெல் விருதுகளில் சிறந்த திரைப்படம் மற்றும் சிறந்த திரைக்கதை விருதுகளை வென்றது. இது 22 ஆவது ஹொங்காங் திரைப்பட விருதுகளில் சிறந்த ஆசிய திரைப்படமாக பரிந்துரைக்கப்பட்டது.

இத் திரைப்படத்தின் மையக்கருத்தை பார்க்கையில்,ஒரு கிராமப்புறத்தில் வாழ்ந்து வரும் பாட்டி மற்றும் அவருடன் வாழ வருகின்ற பேரனைப் பற்றிய இதயத்தை தூண்டும் கதையை சொல்கிறது. வயதானவர்கள் தன்னலமின்றி கொடுக்கும் நிபந்தனையற்ற அன்பையும் அக்கறையையும் இளைய தலைமுறையினருக்கு நினைவூட்டுகிறது.

> **திரைப்படத்தின் மையக்கருத்து, ஒரு கிராமப்புறத்தில் வாழ்ந்து வரும் பாட்டி மற்றும் அவருடன் வாழ வருகின்ற பேரனைப் பற்றிய இதயத்தை தூண்டும் கதையை சொல்கிறது**

படத்தில் பாடல்கள் என்று எதுவும் இடம்பெறவில்லை. ஆனால் *back ground music* இடம் பெற்றுள்ளது. இது பாடலை விடவும் மிக அதிக அர்த்தத்தை உணர்வுபூர்வமாக விளக்குகிறது. இப்படத்தில் *protaganist* ஆக ஊமைப்பாட்டி (ஹிம் யூல் பூன்), சிறுவன் (சாங் வூம்) காணப்படுகின்றனர்.

*Antagonist* ஆக கோபம் சார்ந்த சிறுவனின் குறும்புத்தனங்களும், சூழலும் கடினமான பாதைகள் என்பன காணப்படுகின்றன.

நடிப்பு பற்றி பார்க்கையில், இயக்குநர் லீ ஜியோங் தனது இரண்டு முன்னணிகளில் இருந்து வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள் கிளர்ச்சியூட்டும் மற்றும் நம்பகமானவை. பாட்டியாக நடிக்கும் கிம் ஒரு தொழில் முறை நடிகை அல்ல. கிம்மின் முகம் மற்றும் எளிமையான வெளிப்பாடுகள் அவரது கதாபாத்திரத்திற்கு அமைதியான கண்ணியம், உறுதியான உறுதிப்பாடு, மற்றும் அசைக்க முடியாத அன்பு ஆகியவற்றை கொடுக்கின்றன. திரைப்படத்தின் ஒரே தொழில் முறை நடிகரான சிறப்பாக இருக்கிறார். அவர் இறுதியில் தனது பாட்டியை பாராட்டவும் பராமரிக்கும் வருகிறார். ஒன்றாக இந்த இரண்டு நடிகர்களும் ஓர் அசாதாரண சினிமா ஜோடியை உருவாக்குகிறார்கள். இது பார்வையாளர்களை கவர்ந்திருக்கிறது இவ்வாறு நடிப்புத்திறன் காணப்படுகிறது. இயக்குநர் லீ ஜியோங் ஹியாங் தனது இரண்டு முக்கிய கதாபாத்திரங்களுக்கிடையில் உள்ள வியத்தகு திறனை திறமையாக சுரங்கப்படுத்தி உள்ளார்.

இத் திரைப்படத்தில் தொழில்நுட்ப முறை பற்றிப் பார்க்கையில் *long shot, short shot* மூலம் மிகவும் அழகாக படம் எடுக்கப்பட்டுள்ளது.

> **தென்கொரியாவின் பழைய தலை முறையினருக்கும் நாட்டின் ஜனநாயகத்தின் வலி மிகுந்த தோற்றத்தையும், உலகில் வளர்ந்த இளைஞர்களுக்கும் இடையிலான இடைவெளியை ஆய்வு செய்கிறது**

இத்திரைப்படத்தின் தனித்துவம் பற்றி பார்க்கையில் மிகவும் நேரடியான விளக்கத்தை தவிர The way home தென்கொரியாவின் பழைய தலைமுறையினருக்கும் நாட்டின் ஜனநாயகத்தின் வலி மிகுந்த தோற்றத்தையும், உலகில் வளர்ந்த இளைஞர்களுக்கும் இடையிலான இடைவெளியை ஆய்வு செய்வதாகவும் கருதலாம்.

இப்படத்தில் இருந்து கற்றுக் கொள்ளக் கூடிய விடயங்களாக எவ்வாறான வேலைகள் இருந்தாலும் எங்களது மூத்த உறவுகள் தாத்தா, பாட்டி போன்றவர்களுடன் சிறிது நேரம் செலவிட்டு அன்பாக கதைக்க வேண்டும். யாரிடம் உள்ள குறைபாட்டையும் சுட்டிக்காட்டி கேலி செய்வதும் ஏசுவதோ கூடாது. சிறுவர்கள் அவ்வாறு கோபப்பட்டாலும் குறும்புத்தனம் காட்டினாலும் அவர்களுக்கு இரக்க குணம் காணப்படும். சிறுவர்கள் எவ்வளவுதான் சண்டை போட்டுக் கொண்டாலும் அது எல்லாம் மறந்து அவர்களுக்கு உதவி செய்கின்ற மனப்பாங்கு காணப்படும். இவ்வகையான கருத்துகளை இத்திரைப்படத்தின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

இத்திரைப்படத்தின் தலைப்பின் பொருத்தப்பாடு பற்றி பார்க்கையில் பாட்டி இறுதியாக தன்னுடைய வீட்டிற்கே செல்கின்றார். எங்கு சென்றாலும் வீட்டிற்கு செல்ல ஒரு பாதையை பயன்படுத்துகின்றார். இவ்வாறாக The way home எனும் தலைப்பு பொருத்தப்பாடு உடையது.

இத்திரைப்படம் *melo drama* வகைக்குள் அடங்குவதுடன் இதனுடைய முடிவு *open ending* ஆக காணப்படுகிறது. அதாவது இப்படத்தினுடைய முடிவு பாட்டியின் நிலை இனி என்ன என்பது மக்களிடம் விடப்படுகிறது.

இவ்வாறாக இத்திரைப்படத்தின் இயக்குநர் இத்திரைப்படத்தினை மிகவும் அழகான முறையில் கொண்டு சென்றுள்ளதுடன் அனைவரது மனதிலும் இடம் பிடிக்க அனைவரது மனதையும் வருடக் கூடிய ஒரு திரைப்படமாக காணப்படுகின்றது.

### கல்முனை மாநகர சபை ஊழல்:

# “குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை உறுதி”

## கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம் அஸ்மி

■ நூருல் ஹுதா உமர்

கல்முனை மாநகர சபையில் இடம்பெற்ற ஊழல் தொடர்பில், குற்றமிழைத்தவர்களை முறையான விசாரணைக்கு உட்படுத்தி, உரிய தண்டனை பெற்றுக்கொடுக்க கல்முனை மாநகர சபை தயாராக இருப்பதாகவும், இதற்காக உதவி ஆணையாளர், கணக்காளர், பொறியியலாளர், பிரதம இலிகிதர் அடங்கிய குழுவை அமைத்துள்ளதாகவும், சட்ட நடவடிக்கைகளுக்கான விடயங்கள் முனைப்புடன் இடம்பெறுவதாகவும் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம் அஸ்மி தெரிவித்தார்.

‘கல்முனையான்ஸ் போரம்’ அமைப்பின் பிரதான ஒருங்கமைப்பாளர் முபாரிஸ் எம் ஹனிபா தலைமையிலான அமைப்பினரும், கல்முனை பிரதேச சமூக செயற்பாட்டாளர்களும் நேற்று (01) கல்முனை மாநகர ஆணையாளரை சந்தித்து கல்முனை



மாநகர சபையில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் மகஜர் கையளித்தனர். இந்தச் சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த போதே ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையில் 78 இலட்சம் ரூபாய் அளவில் ஊழல் இடம்பெற்றுள்ளதாக முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் கல்முனை பொலிஸில் 20ஆம் திகதியும், அம்பாறை விசேட குற்றத்தடுப்பு பிரிவில் 25ஆம் திகதியும் முறைப்பாடு செய்துள்ளதாகவும் முகவர்களிடம் பொதுமக்கள் பணத்தை செலுத்த வேண்டாம் என்றும் நேரடியாக சபைக்கு வந்து காசாளரிடம் தமது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுமாறும் மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட முபாரிஸ் எம் ஹனிபா, இந்த ஊழல் தொடர்பில் கல்முனை மக்கள் விழிப்பாக இருப்பதாகவும் தேவையானவர்களுக்கு தேவையான உதவிகளை கல்முனையான்ஸ் போரம் வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

### சி.ஐ.டி எனக் கூறி வீட்டுக்குள் நுழைந்தவரால்

# 38 பவுண் நகை கொள்ளை

■ எம். றொசாந்த்

புலனாய்வு பிரிவை சேர்ந்தவர் எனக் கூறிக்கொண்டு, வீட்டுக்குள் புகுந்தவர் 38 பவுண் நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளார்.

சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது;

கல்வியங்காட்டு பகுதியில் உள்ள வீடொன்றில் வயோதிப தம்பதியினர் வசித்து வரும் நிலையில், திங்கட்கிழமை (27) நபரொருவர் தன்னை புலனாய்வு பிரிவை சேர்ந்தவர் என அடையாளப்படுத்திக்கொண்டு, வயோதிப தம்பதியினரிடம் விசாரணைகளை முன்னெடுப்பது போன்று பாசாங்கு செய்துள்ளார்.

பின்னர் வீட்டைச் சோதனையிட வேண்டும் எனக் கூறி வீட்டுக்குள் சென்று, அலுமாரிகளை சோதனையிட்டு, அங்கிருந்த 38 பவுண் நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில், வயோதிப தம்பதியினர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வறுமை, காலநிலை மாற்றம் தொடர்பான கலந்துரையாடல்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

வறுமைநிலை, காலநிலை மாற்றம் அதனால் ஏற்படும் முரண்பாடுகள் தொடர்பில் ஆய்வை மேற்கொண்டு அதற்கான தீர்வுகளை எவ்வாறு முன்வைத்து செயற்படுத்தலாம் என்ற நோக்கின் அடிப்படையில் நேற்று முன்தினம் (28) வறுமை ஆராய்ச்சி நிறுவனத்தின் உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் (நிர்வாகம்), மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் உட்பட பலர் இணைந்திருந்தனர்.




## யோகபுரம் மகாவித்தியாலய வைரவிழா

■ சண்முகம் தவசீலன்

மல்லாவி, யோகபுரம் மகாவித்தியாலயத்தின் வைரவிழா நேற்று (01) ஆரம்பமாகியது. வித்தியாலயத்தின் அதிபர் த. பிறேமசந்திரன் தலைமையில் நடைபெற்ற வைரவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபருமான ந. வேதநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் வலய கல்வி பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன், வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதி கல்வி பணிப்பாளர் தர்மலிங்கம் முகுந்தன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில், பாடசாலையின் வரலாற்றை தாங்கிய ‘வைரநதி’ நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## சிங்கள மொழியில் முதுமாணிப் பட்டம்

■ அஸ்ஹர் இப்றாஹிம்



சாய்ந்தமருதைச் சேர்ந்த அப்துல் ஹமீது நாஸிக் அஹ்மத், சிங்கள மொழியில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற களனி பல்கலைக்கழகத்தின் 132ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில், இவர் சிங்கள மொழியில் துறைக்கான முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

2017ஆம் ஆண்டு இலங்கை ஆசிரியர் சேவையின் இரண்டாம் மொழி சிங்கள பாடத்துக்கான ஆசிரியராக பொத்துவில், அல்-கலாம் மகா வித்தியாலயத்தில் நியமனம் பெற்றார். தற்போது, சம்மாந்துறை அல்-அர்சத் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) சிங்களப் பாட ஆசிரியராக சேவையாற்றுகின்றார்.

இவர், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பகுதி நேர சிங்கள பாடநெறிக்கான வருகைதரு விரிவுரையாளராகவும், மகரகம கல்வி நிறுவகத்தின் தேசிய வளவாளராகவும் அரச கரும மொழிகள் திணைக்களத்தினதும் ,தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினதும் பாடநெறிகளுக்கான தேசிய வளவாளராகவும் சேவையாற்றுகின்றார்.



## சமுர்த்தி பயனாளிகளுக்கு இளைப்பாறும் கட்டடம்

■ அபு அலா

சமூக சேவையாளர் சரவணமுத்து யோகநாயகத்தின் நான்காவது ஆண்டு ஞாபகார்த்த நினைவையொட்டி திருகோணமலை, இலுப்பைக்குள பிரதேச சமுர்த்தி பயனாளிகளின் நலன்கருதி நான்கு இலட்சம் ரூபாய் நிதியில் நிர்மாணிக்கப்பட்ட இளைப்பாறும் கட்டடம், மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (28) நடைபெற்றது.

காப்போம் அமைப்பின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு. பிரதீபகரன் தலைமையில் நடைபெற்ற இந்தத் திறப்பு விழாவுக்கு கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ. ஸ்ரீதர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

# மன்னாரில் பாரம்பரிய நெல் இன அறுவடை

■ எஸ். றொகேரியன் லெம்பெட்

அழிந்து வரும் பாரம்பரிய நெல் இனங்களை பாதுகாக்கும் முகமாக, மன்னார் மெசிடோ நிறுவனத்தால் கடந்த வருட இறுதியில், தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு தொகை பாரம்பரிய நெல் விதைகள் வழங்கி வைக்கப்பட்டன. குறித்த நெற் செய்கையின் அறுவடை நேற்று (01) காத்தான் குளம் பகுதியில் மெசிடோ நிறுவன ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

‘நஞ்சற்ற உணவு உற்பத்தியை’ ஊக்குவிக்கும் முகமாக முற்றிலும் இயற்கை பசளைகள் பயன்படுத்தி, இயற்கையான முறையில் பயிர்



செய்யப்பட்ட ‘சுவடை’ என அழைக்கப்படும் பாரம்பரிய மூன்று மாத கால நெல் அறுவடை பாரம்பரிய முறையில் இடம் பெற்றது.

மெசிடோ நிறுவனமானது, கடந்த மூன்று வருடங்களாக, பாரம்பரிய நெல் இனங்களை பாதுகாக்கும் முகமாகவும் நஞ்சற்ற விவசாய செய்கையை ஊக்குவிக்கும் முகமாகவும் ‘சீனட்டி’, ‘மொட்டைகறுப்பன்’, ‘சுவடை’, ‘பச்சைபாளை’ போன்ற நெல் இனங்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### முள்ளியவளை சந்தை

## கடைத்தொகுதி வேலைகள் ஆரம்பம்

■ நடராசா கிருஸ்ணகுமார்

முள்ளியவளை சந்தையில் கடைத் தொகுதி வேலைகள் நடைபெற்று வருவதாக கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க. விஜிந்தன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

உலக வங்கியின் 22.5 மில்லியன் நிதி உதவியில் இக்கடைத் தொகுதி வேலைகள் நடைபெற்று வருகின்றன. கடந்த செப்டெம்பர் மாதத்தில் இவ்வேலைகள் தொடங்கப்பட்ட போது தனிநபர் ஒருவர், முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இருந்தார். எமது பிரதேச சபை கடைத் தொகுதி வேலைகளை மேற்கொள்ளலாம் என தீர்ப்பு வெளியாகி இருந்தது. தற்போது கடைத் தொகுதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன. இக்கடைத் தொகுதி, இயங்கும் போது முள்ளியவளை சந்தைச் சூழல், ஓர் உப நகரத்துக்குரிய வளர்ச்சி அடையும். மக்கள் பெரும் பயனடைவார்கள் எனவும் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார்.

### புலமைப் பரிசில் சித்தி:

## மாணவர்களுக்கு சைக்கிள்கள்

■ வி.ரி சகாதேவராஜா

சம்மாந்துறை வலயத்தில் மிகவும் பின்தங்கிய மல்வத்தை கணபதிபுரம் விக்னேஸ்வரா வித்யாலயத்தில், இம்முறை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மூன்று மாணவர்களுக்கு சைக்கிள்கள் நேற்றுமுன்தினம் (28) வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் எஸ். கிருபைராஜா தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில், பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய கல்விப் பணிப்பாளர் டொக்டர் உமர் மௌலானா கலந்து சிறப்பித்தார்.

இந்தச் சைக்கிள்களை ‘அசிஸ்ற் ஆர் ஆர்’ அமைப்பின் பிரதிநிதிகளான பொறியியலாளர் ஹெனறி அமல்ராஜ், கலாநிதி வி. சர்வேஸ்வரன் ஆகியோர் அன்பளிப்பு செய்திருந்தார்கள்.







### விருந்தோம்பல் துறை:

## மாணவர்களுக்கு சான்றிதழ்கள்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

விருந்தோம்பல் துறையில் கல்வி கற்ற இளைஞர் யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கல்லடியில் உள்ள தனியார் விடுதியில் செவ்வாய்க்கிழமை (28) நடைபெற்றது.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை நடத்திய 20 நாள் பயிற்சி பட்டறையை பூர்த்தி செய்த 40 மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டார்கள். சர்வதேச ரீதியிலும் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ள கூடிய வகையில் இப்பயிற்சிப் பட்டறை அமைந்திருந்தமையும் விருந்தோம்பல் துறை சிரேஷ்ட பயிற்றுவிப்பாளர் கே.எஸ் தாசன் வளவாளராக செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் திட்ட இணைப்பாளர் ஸ்ரீயானி ஏக்கநாயக்க, தேசிய தொழில் பயிற்சி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் மேற்பார்வை பணிப்பாளர் பி. ஆர் ரொட்ரிக்கோ, றொட்டரி கழகத்தின் முன்னாள் தலைவர் ஸ்டீபன் புஷ்பராஜா, இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பிரதி செயலாளர் நாயகம் எம். விஜேசூரிய உட்பட பலர் கொண்டனர்.

### வடமாகாண கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள்

## சிறீதரன் எம்.பியுடன் சந்திப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் இணைந்து, நேற்று முன்தினம் (28), பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை சந்தித்துக் கலந்துரையாடி உள்ளனர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான ‘அறிவகத்தில்’ நடைபெற்ற இக்கலந்துரையாடலில், சமகாலத்தில் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளின் அதிகரிப்பு, எல்லை தாண்டிய மற்றும் சட்டவிரோத மீன்பிடியால் கடற்றொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் எதிர்கொள்ளும் வாழ்வாதார இடர்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பரிசீலிக்கப்பட்டன.

இதுவிடயமாக, உரிய தீர்வைப் பெறுவதற்கு, தன்னாலான முயற்சிகளை முன்னெடுப்பதாக சிறீதரன் எம்.பி பிரதிநிதிகளிடம் உறுதியளித்திருந்தார்.

### சேதமடைந்த ஐயன்கன்குளத்தை

# புனரமைக்குமாறு ஆளுநருக்கு கடிதம்

■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு, ஐயன்கன்குளத்தை புனரமைத்துத் தருமாறு ஐயன்கன்குளம் கமக்கார அமைப்பு வடமாகாண ஆளுநருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது. அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

ஐயன்கன்குளம் பல காலமாக புனரமைப்பு செய்யப்படாததன் காரணமாக சேதமடைந்து காணப்படுகின்றது. விவசாயிகளாகிய நாங்கள், ஒவ்வொரு மழை காலத்திலும் மண் மூடைகளை அடுக்கி, குளத்தைப் பாதுகாத்து வருகின்றோம். அத்துடன் குள வாய்க்கால்கள், குள வீதிகள் என்பனவும் சேதமடைந்து காணப்படுகின்றன.

இந்நிலையில், குள வேலைகளை செய்து தருமாறு நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் பல முறை கோரிக்கை விட்ட போதும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் எமது கோரிக்கையை நிறைவேற்றப்படாமல் உதாசீனம் செய்வது எமக்கு மன வேதனையை அளிக்கின்றது. அத்துடன், 2021ஆம் ஆண்டில் இருந்து கூட்டங்கள் மட்டும் நடைபெறுவதுடன் வேலைகளை ஆரம்பிக்காமல் உள்ளனர். இதனால் குள நீர் வாய்க்கால்கள் மூலம், பாரிய நீர் இழப்பு ஏற்பட்டு வருகின்றது.

இவ்விடயத்தில் தாங்கள் தலையிட்டு, குள வேலைகளை இவ்வருடமாவது நிறைவேற்றித் தர வேண்டுகின்றோம். விவசாயத்தை நம்பியே 350 குடும்பங்கள் வசித்து வருகின்றன எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உலக தாய்மொழி தினம்

தமிழ் அமுதம் கலைவட்டம் நடத்திய ‘உலக தாய்மொழி நாள் நிகழ்வு’ நிறுவுநர் திருமதி. சுஜந்தினி யுவராஜா தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (26) திருகோணமலை பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை அழைப்பாளராக திருமலை நவமும் சிறப்பு அழைப்பாளர்களாக க. யோகானந்தன், அ. ரவீந்திரன், திருமதி ரே சதாசிவமும் கலந்து கொண்டனர்.

இதன்போது, எமது தாய்மொழி தொடர்பான சிறப்புரைகள், கவியரங்கு, நடன ஆற்றுகைகள், தனிநடிப்பு ஆற்றுகைகள் என்பன நிகழ்த்தப்பட்டதுடன்



சான்றிதழ்களும் சம்பூர் செல்லக்குட்டி அருணோதயத்தின் அனுசரணையுடன் வழங்கப்பட்டன.

## பூநகரி, 19ஆம் கட்டை பொதுச் சந்தை மீள ஆரம்பம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

பூநகரி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட 19ஆம் கட்டை பொதுச்சந்தை, நேற்று (01) மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு, இறைச்சி விற்பனை, மீன்விற்பனை, மரக்கறி வகைகள், பழவகைகள் என்பவற்றை விற்பனை செய்வதற்குரிய பகுதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சந்தை வளாகத்தில் மூடப்பட்ட நிலையில் உள்ள வர்த்தக நிலையங்களை ஆரம்பிக்க வேண்டும் என வர்த்தகர்களுக்கு தகவல் வழங்கப்பட்டமைக்கு அமைவாக, தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் நிலையங்கள் புதிய வர்த்தகர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அனைத்து வர்த்தகர்களும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பூநகரி பிரதேச சபையால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘சாவு மணி அடிக்காதே’

■ துவாரகஷான்

ஆசிரியர் சங்கத்தால் நாடளாவிய ரீதியில் நேற்று (01) முன்னெடுத்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட நு/கார்லபேக் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் கறுப்புக்கொடி ஏந்தி பாடசாலைக்கு முன்பாக கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



சுமார் 30க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பதாகைகள் ஏந்தி, கோஷங்கள் எழுப்பி எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

அதேவேளை, மாணவர்களுக்கு கற்பிக்கும் போதும் கறுப்பு உடை அணிந்து, கைகளில் கறுப்பு பட்டி கட்டியிருந்தும் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

“தமக்கு வாழ்க்கை செலவுக்கு ஏற்ப கொடுப்பணவு வழங்க வேண்டும். சுதந்திரமாக போராட்டங்களை நடத்த அரசாங்கம் இடமளிக்க வேண்டும்” என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

தேர்தலை ஜனநாயக முறைப்படி நடத்த வேண்டும்; ஆசிரியர்களை மதித்து அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

‘விலைவாசி உயர்வை கட்டுப்படுத்து’, ‘வரிஅறவீட்டை கைவிடு’, ‘ஜனநாயக அடக்கு முறையை கைவிடு’, ‘ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கு சாவு மணி அடிக்காதே’, ‘ஆசிரியர்களுக்கு உரிய சம்பளத்தை வழங்கு’, என்ற போன்ற வாசகங்கள் அடங்கிய பாதாகைளை ஏந்தியவாறு சுமார் 2 மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## முகப்பு விளக்குகளை ஒளிரவிடுங்கள்

■ ஆ.ரமேஸ்.



நுவரெலியாவில் வானிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் மாலை முதல் இம்மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்துவருகிறது.

கந்தப்பளை, இராகலை, வலப்பனை ஆகிய பிரதேசங்களில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இப்பிரதேசங்களில் பனிமூட்டம் ஏற்பட்டுள்ளது. ஆகையால், வீதிகளில் வாகனங்களை செலுத்துவதில் சாரதிகள் சிரமங்களுக்கு உள்ளாகி வருவதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது.

மேலும் பிரதான வீதிகளில் செல்லும் வாகனங்களின் முகப்பு விளக்கை ஒளிரவிட்டு அவதானத்துடன் பயணிக்குமாறும், வேக கட்டுப்பாடுடன் பயணிக்குமாறும் போக்குவரத்து பொலிஸார் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

## ஊக்குவிக்கும் வேலைத்திட்டம்

■ சிவா ஸ்ரீதரராவ்



உணவுப் பாதுகாப்புக்காக உள்ளூர் கிழங்கு பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் வேலை திட்டத்தை சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது. இதன் அடிப்படையில் உள்ளூர் கிழங்கு மற்றும் கிழங்கு தொடர்பான உணவுகளின் கண்காட்சியும், விற்பனையும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் கேகாலை, வாகொல்ல விவசாய பயிற்சி நிலையத்தில், அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## இரண்டு வாகனங்களை பந்தாடிய லேண்ட் ரோவர்



அதிக வேகத்தில் பயணித்த லேண்ட் ரோவர் வாகனமொன்று, வீதியோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறி மற்றும் ஓட்டோவை பந்தாடி பதம் பார்த்துவிட்டு, பஸ்தரிப்பிடத்தில் முட்டிமோதி நின்றுள்ளது.

ஹட்டன்-டிக்கோயாவில் இருந்து நோர்வூட் வரை அதிவேகத்தில் பயணித்த லேண்ட் ரோவர் வாகனமே டிக்கோயா-வனராஜா பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மேலே குறிப்பிட்ட இரண்டு வாகனங்கள் மீது மோதிவிட்டு, பஸ்தரப்பிடத்தையும் பதம் பார்த்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த லேண்ட் ரோவரின் சாரதியும் மற்றுமொருவரும் டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (01) காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில், லேண்ட் ரோவரின் சுக்கான் திடீரென செயற்பட மறுத்தமையை அடுத்தே, இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

## ஐயர் தவறவிட்ட பணத்தை ஒப்படைத்த ஓட்டோ சாரதி

■ ரஞ்சித் ராஜபக்ஷ



ஐயர் ஒருவர் தவறவிட்ட 12 ஆயிரத்து 95 ரூபாய் பணத்தையும் ஏனைய ஆவணங்களையும் ஓட்டோ சாரதியொருவர் கண்டெடுத்து ஐயரிடம் ஒப்படைத்த சம்பவமொன்று ஹட்டனில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை, மல்வத்த பிரதேசத்தில் இருந்து சிவனொளிபாதமலைக்கு வந்த ஐயரே இவ்வாறு பணத்தை தவறவிட்டுள்ளார்.

கொழும்பு, கோட்டையில் இருந்து பதுளைக்கு பயணித்த ரயிலில் வந்த 23 வயதான அஜித்குமார் என்ற ஐயர், ரயிலில் இருந்து இறங்கி, ஹட்டன் ரயில் நிலையத்துக்கு அண்மையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் ஏறமுயன்றபோது 28 ஆம் திகதி மாலை 3 மணியளவில் பணத்துடன் பொதியை தவறவிட்டுள்ளார்.

அந்தப் பொதியை கண்டெடுத்த, வாடகைக்கு ஓட்டோ செலுத்தும் சாரதியான ஹட்டன் ஆரியகமவை வசிப்பிடமாகக் கொண்ட ருக்ஷான் செனவிரத்ன (வயது 46) ஹட்டன் பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஊடாக உரியவரிடம் கையளித்துள்ளார்.

ஓட்டோ சாரதியால் கண்டெடுக்கப்பட்ட பொதியில், ஐயரின் அடையாள அட்டை, வங்கி அட்டைகள் சில, இருந்துள்ளன.

## “மாற்றத்தை ஏற்படுத்த நாம் ஒன்றிணைவோம்”

■ எஸ். கே.குமார்



200 வருடங்களுக்கு முன் தொழில் நிமித்தமாக இந்தியாவிலிருந்து வருகை தந்த மலையக இந்திய வம்சாவளி பெருந்தோட்ட தொழிலாளர்கள், எந்தவித மாற்றமும் இல்லாமலே வாழ்ந்து வருகின்றார்கள் என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான ஆர். இராஜாராம் தெரிவித்துள்ளார்.

இவர்களின் வாழ்வாதாரத்தில் ஒரு மாற்றத்தை கொண்டுவருவதற்கு மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள், கல்விமான்கள், சமூக ஆய்வாளர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் ஒன்றிணைந்து தங்களது பிரிவினைவாதத்தை விடுத்து, ஒருமித்து இம்மக்களின் வாழ்வாதார நிலைப்பாட்டை மாற்றுவதற்கு ஒன்றிணைவோம்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில், இந்த நாட்டில் வாழும் ஏனைய சமூகங்களை விட மலையக இந்திய வம்சாவளி பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது.

தொழிலார்களின் உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லை. தோட்ட கம்பனிகள் இலாபத்தை தேடுவதிலே அதிக அக்கறை செலுத்துகின்றன. தொழிலாளர்களின் நலனில் அக்கறை காட்டுவதில்லை. அதேபோல, தோட்ட வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற போதிலும் அங்கு வைத்திய சேவைகளை முறையாக செயற்படுத்த போதிய உபகரணங்கள், மருந்துகள், அம்பியுலன்ஸ், வைத்தியர் வசதிகள் இல்லை.

தோட்ட தொழிலாளர்களின் தொழில் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பாக செய்து கொள்ளப்பட்டுவந்த கூட்டு ஒப்பந்தமும் கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றது.

எனவே, 200 வருடங்கள் கடந்தும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதார நிலைப்பாட்டில் மாற்றமில்லை. இவர்களின் வாழ்வாதார நிலைப்பாட்டில் ஒரு மாற்றத்தை கொண்டுவருவதற்கு மலையக சமூகம் ஒன்றிணைய வேண்டுமென இராஜாராம் கோரினார்.

## கோழி முட்டையின் விலையில் தளம்பல்

■ செ.தி.பெருமாள்

மலையக பகுதிகளில் உள்ள அனைத்து நகரங்களிலும் கோழி முட்டையின் விலை அதிகரித்து உள்ளதால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் 44 ரூபாய் முதல் 46 ரூபாய் வரையிலான விலைக்கு கோழி முட்டை ஒன்றை விற்பனை செய்ய வேண்டுமென விலை நிர்ணயம் செய்துள்ள போதும் பல நகரங்களில் பல்வேறு விலைக்கு விற்கப்படுகிறது என நுகர்வோர் புகார் தெரிவிக்கின்றனர். இறைச்சி வகைகள் உண்ணும் அளவுக்கு தங்களுடைய பொருளாதாரம் இல்லையெனத் தெரிவிக்கும் பெருந்தோட்ட தொழிலாளர்கள், பாடசாலைக்குச் செல்லும் தங்களுடைய பிள்ளைகளை வளர்க்க சத்து நிறைந்த முட்டைகள் வாங்க முடியாத நிலையில் உள்ளதாக தெரிவிக்கின்றனர். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவணம் செலுத்தி மத்திய மலைநாட்டில் உள்ள அனைத்து சில்லறை விற்பனை கடைகளில் முட்டைகள் விலை பற்றி கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென நுகர்வோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.



## வினா- விடை போட்டி நிகழ்ச்சி

உக்குவளை பிராந்திய கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேசத்தில் அமைந்த தமிழ் மொழிமூல பாடசாலைகளில் தரம் 11இல் கல்விகற்கும் மாணவ மாணவிகளுக்கு இடையிலான வினா- விடை போட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன. இதற்கான அறிவித்தல்கள் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

உக்குவளை அஜ்மீர், குரீவெல ஹமீதியா, வரக்காமுர அந்நூர், ரத்வத்த தமிழ், உள்பத்பிட்டிய முஸ்தபா ஆகிய பாடசாலைகளின் மாணவ மாணவிகள் இப்போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றவுள்ளனர். போட்டி நிகழ்ச்சிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் வெற்றிபெறும் மாணவ மாணவியர்களுக்கு நிகழ்வின் இறுதியில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என அந்த அமைப்பின் ஸதாகத் தலைவர் முன்னாள் அதிபர் எம். நிஸ்பர் தெரிவித்தார்.

## அனர்த்தங்களை தடுக்க பண்பு தேவை

■ உமாமகேஸ்வரி

இயற்கை அனர்த்தங்களை தடுக்க முடியாது. உலக நாடுகள் பல சவால்களையும் பல அழிவுகளையும் சந்தித்து வருகின்றன என இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குனரட்ன கூறினார்.

இரத்தினபுரி மாவட்ட இடர் அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தின் ஏற்பாட்டில் இரத்தினபுரி மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கொன்று இரத்தினபுரி கேத்துமதி ஹோட்டலில் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் கூறியதாவது.

இலங்கை உட்பட பல உலக நாடுகள் அவ்வப்போது இடம் பெறும் இயற்கை அனரத்தங்கள் காரணமாக பல்வேறு அழிவுகளையும் சேதங்களையும் சந்தித்து வருகின்றன.

இந்த இயற்கை அனரத்தங்கள் ஏற்படுவதற்கு பிரதான காரணம் மனிதர்களுடைய இயற்கைக்கு எதிரான செயற்பாடுகள் ஆகும்.

ஆறுகளையும் மலைகளையும் காடுகளையும் அதன் போக்கில் சுதந்திரமாக இருக்க விட்டால் இயற்கை அழிவுகள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் எதுவும் இடம்பெறாது.

ஆனால் மனித செயற்பாடுகள் இயற்கைக்கு எதிராக உள்ளன. குறிப்பாக ஆறுகளை அதன் போக்கில் செல்லவிடாது அதனை வழிமறித்து வேறு திசையில் திரும்புகின்றனர். அதேபோல் மலைகளையும் மலைத்தொடர்களையும் காடுகளையும் அதன் போக்கில் இருக்க விடுவதில்லை. தவறான முறையில் அங்கு கட்டடங்களையும் வீடுகளையும் அமைக்கின்றனர். இதன் காரணமாக இலங்கையில் இயற்கை அனர்த்தங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுகின்றன. இயற்கை அனர்த்தம் ஏற்படுவதையும் அதனால் ஏற்படும் அழிவுகளையும் சேதங்களையும் குறைக்க அல்லது அதனை தடுக்க பொது மக்கள் தமது பங்களிப்புகளை வழங்க வேண்டும்.

இயற்கை அனரத்தங்களை தடுக்க மனிதர்களிடையே நற்பண்புகள் தேவையாகும் என்றார்


## சிறுத்தைக்கு வலை விரித்தவருக்கு சிக்கல்

■ என். ஆராச்சி

புளத்கொஹூபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள இஹல உடுவ பிரதேசத்தில் தேயிலைத் தோட்டத்தில் கம்பி சுருக்கில் சிக்கி, சிறுத்தையொன்று உயிரிழந்துள்ளது.

5 வயதான அந்தச் சிறுத்தை நேற்று (01) அதிகாலை வேளையில் உயிரிழந்துள்ளது. என புளத்கொஹூபிட்டிய வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர். சிறுத்தை மரணமடைந்தமை தொடர்பில், கேகாலை நீதவான் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

மிருக வைத்தியரைக் கொண்டு சிறுத்தையின் உடலத்தை பரிசோதனைக்கு உட்படுத்தி நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுமாறு உத்தரவிட்ட நீதவான், சம்பவத்துடன் தொடர்புடையவர் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கையை எடுக்குமாறு வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.



## ஷொக் அடிக்கிறது

■ சுதத் எச்.எம்.ஹேவா

மின்சாரக் கட்டணம் அதிகரித்தமை காரணமாக தாங்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் நிலைமையில், மின்சாரக் கட்டணமும் அதிகரித்துள்ளமையால் தாங்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றோம் என்றனர்.

தங்களுக்குக் கிடைக்கும் குறைந்த சம்பளத்தில் ஒருவேளை கூட முறையாக சாப்பிடமுடியாது உள்ளது. இந்நிலையில், அதிகரிக்கப்பட்டுள்ள மின்சார கட்டணமானது தாச்சியில் இருந்து அடுப்புக்குள் இழுத்து வீழ்த்தும் செயலைப் போன்றது என்றனர்.

# நியாயமில்லாமல் சிந்திக்கும் முதலாளிகளும் தவிக்கும் நுகர்வோரும்

எதாவது பொருளின் விலை அதிகரிக்கப்படாதா, அதனை மாற்று பொருளொன்றின் விலையுடன் செருகி, விலையை அதிகரித்துக்கொள்ளலாம் எனப் பெரும் முதலைகளும் ஒருசில வர்த்தகர்களும் சதா சிந்தித்துக்கொண்டிருக்கும் நிலையில், எங்காவது குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்காத என நுகர்வோர் அலைந்துதிரிய வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பொருட்களை தேடியலைந்து கொள்வனவு செய்வதை விடவும், கையிலிருக்கும் பணத்துக்கு ஏற்றவகையில் அந்தப் பொருளை ஈடுசெய்யும் வகையிலான மாற்றுப் பொருளை அல்லது பொருட்களை தேடிப்பெறுவதிலேயே நுகர்வோர் அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இன்றைய நிலையில், மக்கள் படுகின்ற அவலநிலைமையை முதுமொழிகளில் கூறுவதாயின், 'தாச்சிக்குள் இருந்து அடுப்புக்குள் விழுந்த கதை' எனலாம். அந்தளவுக்கு பொருளாதாரம் ஒவ்வொரு மனிதனையும் கடுமையாக வாட்டி வதைத்து, கசக்கிப் பிழிந்துகொண்டிருக்கின்றது.

மின்சாரக் கட்டணம் 66 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டதை அடுத்து, ஹோட்டல்களில், கொத்து, பிரைட் ரைஸ் உள்ளிட்ட இன்னும் பல உணவுகளின் விலைகள் 10 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டன. சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படும்போது, உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படுவதில் ஒரு நியாயம் இருந்தது. ஆனால், மின்சாரக்கட்டணம் அதிகரிக்கப்பட்டபோது உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டமைக்கான காரணம்தான் இன்னும் புரியவில்லை. மேலே குறிப்பிட்ட உணவுப்பொருட்களுக்கும் மின்சாரத்துக்கும் இருக்கும் தொடர்பு என்னவென பலரும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

மின்சார செலவை ஈடுசெய்வதற்காக அந்தப் பொருட்களின் விலைகளை அதிகரித்துள்ளோம் எனப் பலரும் வியாக்கியானம் செய்யலாம்; விவாதிக்கலாம். எனினும், ஹோட்டல்களில் விற்பனை செய்யப்படும் குளிர்பானங்களின் விலைகளை அதிகரித்திருந்தால் அதிலொரு நியாயம் இருக்கின்றது.

நியாயமில்லாமல் சிந்திக்கும் முதலாளிகளால் நுகர்வோர் தவிக்கும் அதேவேளை, பல உணவு கடைகளுக்கு பெரும்பாலானோர் தலைகாட்டுவதில்லை. அதனால், அவ்வாறான கடைகளில் ஏற்கெனவே கிடைத்த நாளொன்றுக்கான இலாபமும் கிடைக்கவில்லையென அவர்கள் புலம்புகின்றனர்.

இந்நிலையில்தான், 355 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விலை, நேற்று (01) புதன்கிழமை நள்ளிரவு முதல் அமலாகும் வகையில் 50 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. 464 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த தொழிற்றுறைகளுக்கு பயன்படுத்தும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 134 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் பயன்படுத்துவோருக்கு இந்த விலைகுறைப்பு ஓரளவுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கும். மீன்பிடிப்போருக்கு சிறிதளவில் நிவாரணம் கிடைத்துள்ளது. ஆனால், மீன்களை கொள்வனவு செய்வோருக்கு விலைகுறைப்பு கிடைக்குமா?

விலைகள் உயரும் போது அதிலிருந்து இலாபத்தை வாரி அள்ளிக்கொள்ள நினைப்போர், விலைகள் குறைக்கப்படும்போது அதற்கான நிவாரணத்தை, நுகர்வோருக்கு பெற்றுக்கொடுக்கவும் வழிசமைக்கவேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

உலகில் எவருமே தகுதி குறைந்தவர்கள் இல்லை. ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே தலைவன்.

ஒவ்வொருவரும் இறைவனின் மிகநுட்பமான படைப்பு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குணம், வடிவம், புத்தி, செயல் என யாவற்றிலும் வித்தியாசங்கள் உண்டு.

உண்மைகள் அனைத்தையும் எவருமே முழுமையாகத் தெரிந்துகொள்வது கிடையாது. எல்லா விடயங்களிலும் அதிபுத்திசாலியாக இயங்கமுடியாது.

யாவருக்கும் ஏதோ ஒரு தொழில் உண்டு. நாங்கள் சொல்லும் எளிய கருமங்களை முழுமையாகச் செய்ய முடியாது. ஆனால், தொழில் தெரிந்தவனே இலகுவாகச் செய்கின்றான். எல்லோருமே ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்பவர்களே!

எனவே, நாங்கள் எங்களைப் பற்றி பெருமை பேச இயலாது. உண்மைகளை உணர்ந்தால் அடக்கம் உருவாகும்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# இன நல்லிணக்கமும் சமய படிப்பினைகளும்



அ. அச்சுதன்



தமிழ்த் தேசியம் உருப்பெற்ற காலப்பகுதியில் திருகோணமலை நகரமே, வடக்கு - கிழக்கின் தலைநகரம் என்ற சிந்தனை தமிழ்த் தேசியவாதிகளிடம் காணப்பட்டது. ஏனெனில், திருகோணமலை, வரலாற்றுத் தொடர்ச்சியிலும் பல்வேறு துறைகளிலும் வளங்களிலும் புவியியல் அமைப்பிலும் முக்கியத்துவமும் சிறப்பும் பெற்றதாகத் திகழ்ந்தது - திகழ்கின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இதன் அடிப்படையிலேயே, சுதந்திரத்துக்கு முன்னரும் பின்னரும் சிங்கள பெரும்பான்மையின அரசாங்கங்கள், திருகோணமலையை தமிழர்கள் உரிமை கோராத வண்ணம், பல்வேறான சூழ்ச்சித் திட்டங்கள் ஊடாக, பெரும்பான்மை இன மக்கள் அதிகளவில் வாழும் ஒரு நகரமாக மாற்ற தமது அரச அதிகாரங்களைப் சூட்சுமமாகப் பயன்படுத்தினர்.

இருந்தபோதிலும் இன்றும் திருகோணமலை நகர், தமிழ் மணம் மாறாத நகராகத் திகழ்வதுடன், இனமத நல்லிணக்கத்துக்கு முன்னுதாரணமான நகராகவும் திகழ்கின்றது.

திருகோணமலை மாவட்டமானது திருகோணமலை, மூதூர், சேருவில ஆகிய மூன்று தேர்தல் பிரிவுகளையும் 11 பிரதேச செயலகங்களையும் (கோமரங்கடவல, கந்தளாய், கிண்ணியா, குச்சவெளி, மொரவெவ, மூதூர், பதவிசிறிபுர, சேருவிலை, தம்பலகாமம், திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவு-நகரமும் சூழலும், வெருகல் - ஈச்சிலம்பத்தை) கொண்டு அமைந்துள்ளது.

திருகோணமலை தன்னகத்தே அழகியதும் அற்புதமுமான ஓர் இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டது. இந்தத் துறைமுகம் போரியல் ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உலக வல்லரசு நாடுகளால் விரும்பப்படுகின்றது.

பிரெட்ரிக் கோட்டையின் உயரமான குன்றானது 360 அடி (110 மீற்ற) உயரம் கொண்டது. அதன் உச்சியில் எல்லோராலும் மிகவும் மதிக்கப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க திருகோணேஸ்வரம் கோவில் அமைந்துள்ளது. இக்கோவில் பாடல் பெற்ற தலம் என சிறப்புப் பெற்றுள்ளது. அதாவது எட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட தேவார பதிகங்களில் இக்கோவிலின் மாண்பு குறித்து புகழப்படுகின்றது. எனவே, அதற்கு முன்னரே இக்கோவில் கீர்த்தி மிக்கதாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பௌத்தர்களின் புனித இடங்களில் ஒன்றான சேருவில விகாரை, வில்கம் விகாரை என்பனவும் திருகோணமலையில் அமைந்துள்ளன.

கரிமலையூத்தில் உள்ள முஸ்லிம் மசூதி, கத்தோலிக்கர் மற்றும் ஏனைய கிறிஸ்தவ சபையினருக்கான தேவாலயங்கள் அனைத்தும் இந்த மாவட்டத்தில் நிலவுகின்ற மத நல்லிணக்கத்தைக் காட்டுகின்றன.

மத அனுபவங்கள், படிப்பினைகளுக்கு இணங்க, மனித மாண்பை எவ்வாறு பாதுகாத்தல் என்ற விடயம் முக்கியத்துவம் பெறுகின்றது. அந்தவகையில், திருகோணமலையில் மதங்களுக்கு இடையிலான வேற்றுமையில் ஒற்றுமையை நிலைநிறுத்தல் என்பது, ஆழ்ந்து கவனிக்கத்தக்க தன்மையைப் பெற்றுத் திகழ்கின்றது.

பொதுவாக, இந்து மதம், பௌத்த மதம், கிறிஸ்தவ சமயம், இஸ்லாம் மதம் என்ற அனைத்து மதங்களும் அடிப்படையில், மனிதன் தனக்குரிய கடமைகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்றுவதுடன் சமத்துவத்துடனும் நீதியுடனும் வாழ்வதை உறுதிசெய்கின்றன.

இந்து மதம் அடிப்படையில் பல சிறப்புகளை கொண்டுள்ளது. ஆதியான ஒருவர் இல்லை என இந்து மதப் படிப்பினைகள் தெரிவிக்கின்றன. அத்தோடு இந்து மதத்துக்கு ஆதியோ அந்தமோ இல்லை. இம்மதம் சதா காலமும் வழிபடும் ஒரு மதமாக நிலைத்திருக்கிறது. இந்த மதத்தின் நம்பிக்கை, ஒரே சக்தியை அடிப்படையாக கொண்டதாகும். அச்சக்திச் எந்த ரூபமாக இருப்பினும், இருப்பது ஒரே சக்தியாகும். புரிந்து கொள்ளல், அதனை அமல்படுத்தல், பங்கேற்றல் என்பன தொடர்பில் இந்து மதத்தின் அடிப்படை நம்பிக்கை தங்கியுள்ளது.

பௌத்த சமய படிப்பினைகளுக்குள் சமுதாயம் நிலைத்திருப்பதற்கு தேவையான பழக்கவழக்கம், நன்னடத்தை பழக்க வழக்கங்கள், நன்னடத்தை தொடர்பான முன்னுரிமைப் படுத்தப்பட்ட சில படிப்பினைகளை பௌத்த மதபடிப்பினைகளுக்குள் அடையாளம் காணமுடியும்.

பௌத்த மதமானது இவ்வுலகின் சுகபோக வாழ்க்கை குறித்து மாத்திரம் கவனம் செலுத்தவில்லை; மாறாக, விண்ணுலக வாழ்வினதும் அவதார பிறப்புகளினதும் நலனுக்காக இவ்வுலக வாழ்வை சிறப்பிக்கத் தேவையான அடிப்படைக் காரணிகளையும் எடுத்துரைக்கின்றது.

கிறிஸ்தவ சமயம் அன்பு, சமாதானம், விடுதலை வாழ்க்கை, பாதுகாப்பு பற்றி சிறப்பாக எடுத்துரைக்கின்றது. அது வேதாகமத்தின் கூற்றுகளில் வழிநடத்தப்படுகின்றது.

இவ்வுலகத்தில் அனைத்து மனிதர்களும் இறைவனுடைய சாயலாகவே படைக்கப்பட்டனர். (ஆதியாகமம் 1/26, சங்கீதம் 8/5). அத்தோடு மனிதர்களில் இவ்வுலகின் பிறப்பையும் இறைவனுடைய சாயலையும் முழு உலகுக்கும் எடுத்துக் காட்டுகிறது. எனவே இறைவன் படைத்த அனைத்து படைப்புகளிலும் மனிதன் மேலோங்கி நிற்பதோடு, அவனுக்கென விசேட விதமான மாண்பு வழங்கப்பட்டுள்ளது.

இஸ்லாம் என்ற பதமானது சாந்தி, சமாதானம் ஆகும். எனவே, இஸ்லாம் மதத்தின் அடிப்படை 'இஸ்லாம்' எனும் வார்த்தைக்கிணங்க ஒழுகுவதாகும். ஒரு குழந்தையின் பிறப்பு முதல், இறப்பு வரையிலான காலப்பகுதியில் அக்குழந்தை பழகி வாழும் சமுதாயம் எவ்வாறானதாக இருப்பினும், அச்சமுதாயத்தில் வாழவேண்டிய கோட்பாடுகள், படிப்பினைகள் வகுத்தளிக்கப்பட்டுள்ளன. இது திருக்குரான் வார்த்தைகளின் வழி, வழிநடத்தப்படுகின்றது.

எனவே, மத நல்லிணக்கத்துக்கும் இன நல்லிணக்கத்துக்கும் அடிப்படையாக அமைவது ஒவ்வொரு மதத்தைப் பற்றிய புரிதலும், அறிவும் ஆகும். இவை, ஒரு பிரதேசத்தில் வாழும் மக்கள் கூட்டத்தின் மத்தியில் காணப்படுமாயின், அங்கு இனமத நல்லுறவுகள் ஆழமாக வேரூன்றி இருக்கும். எந்த நாசகார சக்திகளின் சூழ்ச்சி வலைக்குள்ளும் அந்த மக்கள் தொகுதி அகப்பட்டுவிடாது.

எனவே, மூன்று இனங்களையும் நான்கு சமயங்களையும் கொண்ட மக்கள் வாழும் திருகோணமலை மாவட்டத்தில், இனமத நல்லிணக்கம் என்பது முக்கியமானது. ஏனெனில், இலங்கையில் ஏனைய அனைத்து மாவட்டங்களையும் விட, திருகோணமலை மாவட்டம், சர்வதேச அரசியலிலும் உள்நாட்டு அரசியலிலும் மிகவும் முக்கியத்துவம் பெற்ற மாவட்டமாகத் திகழ்கின்றது. உலக வல்லரசுகளின் கழுகுக் கண் பார்வைக்குள்ளும் சிங்கள பேரினவாதிகளின் நில ஆக்கிரமிப்பு பொறிக்குள்ளும் திருகோணமலை மாவட்டம், அதனுடைய தனித்துவம் கொண்ட சிறப்புகள் காரணமாக சிக்கவைக்கப்பட்டுள்ளது. சுயநல விசமிகளால், எங்கேயாவது ஒரு தீப்பொறி தட்டிப் போடப்படுமானால், அது பெரும் தீயாகப் பற்றிவிட வாய்ப்பளித்து விடக்கூடாது. தற்போது பேணப்படும் இனமத நல்லுறவுகள் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும். இச்செயற்பாட்டை, திருகோணமலை எகெட்-கரித்தாஸ் நிறுவனம் சர்வமத குழு மூலம் ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த, மத நல்லிணக்கத்துக்கும் இனநல்லிணக்கத்துக்கும் திருகோணமலை எகெட்-கரித்தாஸ் நிறுவனம் திருகோணமலை மாவட்டத்தில் பல சிறப்பான வேலைத் திட்டங்களை நிறுவனத்தின் மாவட்ட பணிப்பாளர் அருட்தந்தை டன்ஸ்டன் பெட்ரிக் ஜோசப் அடிகளார் தலைமையில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன நல்லிணக்கத்தின் அடித்தளமாக திருகோணமலை எகெட் - கரித்தாஸ் நிறுவனத்தால் சர்வமத குழு உருவாக்கப்பட்டுள்ளமை சிறந்த கைங்கரியமாகும். இக்குழு மாவட்டத்தின் பிரதானமானதும் ஒரு முக்கிய சக்தியாகவும் காணப்படுகின்றது. இக்குழுவில் மதகுருமார்கள், சர்வமத தலைவர்கள், பொது நிலையினர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

சமய சகவாழ்வைக் கட்டியெழுப்புதல், சமாதானத்தை ஏற்படுத்துதல் என்ற கருப்பொருளின் அடிப்படையில் திருகோணமலையில் பல்வேறு செயற்பாடுகளை இவர்கள் முன்னெடுத்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இந்தச் சர்வமத குழு மாதாந்த கலந்துரையாடல்களை நடத்தி திருகோணமலையில் நிலையான இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு ஒவ்வொரு மதத்தினரது பண்டிகைகள், விழாக்கள் என்பவற்றில் கலந்து சிறப்பித்து, நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்றனர்.

இனங்களிடையே பிரச்சினைகள் ஏற்படும்போது பிரச்சினைகள் மேலும் ஏற்படாமல், எவ்வாறு தீர்வு காண்பது என்பவற்றை ஆராய்ந்து சிறப்பான தீர்வுகளை எட்டியுள்ளனர்.

உண்மையிலேயே திருகோணமலை எகெட்-கரித்தாஸ் நிறுவனத்தினர், இந்தச் சர்வமத குழுவின் மூலம், திருகோணமலையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் சர்வமத கலாசாரங்களின் ஊடாக நிரந்தரமான தீர்வுகளை எட்டுவதற்கும் பாடுபட்டு வருகின்றனர்.

## கடிதங்கள்

### துணுக்காய் கல்வி வலயம்:
## ஆசிரியர்களும் மாணவர்களும் அவலம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள 61 பாடசாலைகளில், 8,000 அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.




இந்தநிலையில், மேற்படி கல்வி வலயத்தின் கீழ் உள்ள கூடுதலான பாடசாலைகள், மிகவும் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ளதுடன் போக்குவரத்து வசதிகள் இன்றியே காணப்படுகின்றன.

அதாவது, துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள மாந்தை கிழக்கு கல்வி கோட்டத்தக்கு உட்பட்ட மூன்றுமுறிப்பு, பனங்காமம், சிறாட்டிகுளம், பாலைப்பாணி, விநாயகபுரம் பாடசாலைகளும் துணுக்காய் கல்விக் கோட்டத்தின் கீழ் கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம், தென்னியன்குளம், உயிலங்குளம், ஆலங்குளம், தேறாங்கண்டல், ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், அம்பாள்புரம் ஆகிய பாடசாலைகள் உள்ளடங்கலாக சுமார் 27 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு எந்தவித போக்குவரத்து வசதிகளும் இல்லாத நிலை காணப்படுவதுடன், ஆசிரியர்கள் தங்கியிருக்கக் கூடிய வசதிகள் எவையும் இல்லாத நிலையும் காணப்படுகின்றது.

இவ்வாறு ஆசிரியர்களும் மாணவர்களும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றபோதிலும், மேற்குறித்த பாடசாலை மாணவர்கள், கல்வியில் சிறந்து விளங்குவதுடன், அதிபர்கள், ஆசிரியர்கள் தமது சேவைகளை நேர்த்தியாக வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே, இம்மாணவர்கள், ஆசிரியர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

– யது பாஸ்கரன்



# உறவும் விறகும்



ம.லர்ஷிகா
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஊடகக்கற்கை துறை)

சிங்கிளாக உலகம் சுற்றும் ஐஸ்வர்யா பகிரும் வாழ்கை சுவாரசியம் என்ற தலைப்பில் முகப்புத்தகத்தளத்தில் ஒரு post என் கண்ணில்பட்டது. சரி என்ன தான் இருக்கிறது என்று click செய்து பார்த்தல் “சிங்கிள் பெண்கள் என்றால் எப்போதும் கவலையாக இருப்பார்கள் என்று தான் சமுகம் நினைக்கிறது. ஆனால், நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். உங்கள் வாழ்க்கையில் என்ன சுவாரசியமாக செய்ய நினைகிறீர்கள் என்பது தான் முக்கியம். அந்த விஷயம் “patner” மூலமாகத்தான் நடக்க வேண்டும் என்பதில்லை” என்று அவர் தன் தனிப்பட்ட கருத்தை பகிர்ந்திருந்தார்.

தனிமை நம் வாழ்வில் தவிர்க்க முடியாதது என்பதை புரிந்து கொண்டேன். இருப்பினும் அந்த தனிமைக்கு இரு முகங்கள் உண்டு. ஒன்று நாமே விரும்பி ஏற்றுக் கொள்வது. இன்னொன்று நம் மேல் வலிந்து திணிக்கப்படுவது. ஆனால் இரண்டும் ஒன்று கிடையாது. ஒன்று மகிழ்ச்சியை கொடுக்கும் அதே சமயம் மற்றயது, வலியைகொடுக்கும். தனிமை என்றவுடன் ஒருவர் என் நினைவுக்கு வருகிறார். அது என் சிறு வயதில் அடிக்கடி சந்திக்கும் பவளம் பாட்டி. மனிதர்களை நம்புவதெல்லாம் வீண் என்று உணர்ந்து தனிமையில் காலத்தைக் கடத்தியவர்.87 வயதான அவரின் மரணம் இயற்கையின் இயல்பான விதியாகவே இருக்கலாம். ஆனால் அது என் மனதின் ஏதோ ஓர் ஓரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

செல்லப் பிராணிகளை மட்டும் குடும்பமாக எண்ணி குடும்ப வாழ்வை துறந்த துறவி அவர். சிறு வயதில் அவர் வீட்டுக்கு போவதென்றாலே ஒரே குஷி தான்.வீட்டில் மனிதர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் அளவுக்கு எங்கு திரும்பினாலும் நாய்க் குட்டிகளைப் பார்க்கலாம். அதில் டிட்டோ அனைவருக்கும் செல்லம். உடல் முழுவதும் கண்படக்கூடா என்பதற்காகவே கடவுள் படைத்திருப்பான் போல கருமை நிறத்தில், அதில் தனித்து காட்ட சிவப்பு நிறப் பட்டி என பார்ப்பதற்கே வசீகரத்தில் கைதேர்ந்த உருவம். அவன் சுட்டித்தனத்தைப் பார்க்க ஒரு ரசிகர் பட்டாளமே இருக்கும்.

ப்ருனோ பார்ப்பதற்கு கம்பீரமான தோற்றம். மிடுக்குடன் இருக்கும். இருந்தாலும், கடித்து விடுமோ என்ற பயம் அவ்வப்போது வந்து போகாமல் இல்லை. விரல் விட்டு எண்ணினால் இருபதிற்க்கும் மேல் நாய்க்குட்டிகளைப் பார்க்கலாம். தனிமையின் பிடியில் அந்த நாய்க்குட்டிகளோடு கதைத்து, விளையாடி, உணவு வைத்து, தலை சீவி ஒரு குழந்தையோடு பொழுதை கழிப்பது போல் இருக்கும் அந்த பாட்டியின் செயல்பாடுகள்.

சிறு வயதில் அவருடைய போக்கின் ஆழம் புரியவில்லை. காலம் செல்ல தனிமை மிகவும் கொடுமையானது எனத் தெரிந்து கொண்டேன். நாம் பார்ப்பதோ பேசுவதோ போல் எளிதானது அல்ல தனிமையில் வாழ்வது. மனம் விட்டு கதைப்பதற்கோ, சுக துக்கங்களை பரிமாறவோ ,சும்மா பொழுது போகவில்லை எனச் செல்லமாய் சண்டை போடக்கூட ஆளில்லாத வெறுமையான வாழ்வு.


தொலைக்காட்சியையோ, கைப்பேசியையோ இறுகப் பிடித்துக்கொண்டு தூங்காதது மட்டும் தான். மற்றபடி எல்லா நேரமும் அதிலே கழியும். தனிமையும் வெறுமையும் போட்டிபோட்டு நம்மை சூழும். அங்கு கண்ணீரும் கவலையும் விருந்தாளிகள்.

ஆரம்பத்தில் தனிமை தற்பெருமையாக தெரியலாம், தனிமை இனிமை என தத்துவம் பேசலாம். ஆனால் காலம் அதற்கான சிறப்பானப் பதிலை வைத்திருக்கும். இளமையின் பிடியில் இருக்கும் போது நாம் செய்வது தான் சரி என்ற எண்ணம் இருக்கும் அது தவறில்லை. அதுவே, முதுமை தழுவும் போது நாம் எண்ணியது எல்லாம் சரியாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்ற புத்தி திறக்கும். என்ன கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் போலத்தான் அது.

ஒரு மனிதன் சமுகத்திலிருந்து தனித்து இருக்கையில் மன சோர்வு ,மன அழுத்தம் ,உடல் பருமன்,இரத்த அழுத்தம் உள்ளிட்ட உடலியல் நோய் நிலமைகளுக்கு உள்ளாகக்கூடிய வாய்ப்புகள் சமூகத்துடன் இணைந்து வாழ்பவர்களை விட அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் கூறுகிறது. உளவியல் ரீதியான தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது என மனோதத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். தனித்து விடப்பட ஒரு நபர் உணர்ச்சி இழப்பு ,அடிக்கடி கவலை, உணர்ச்சி பிரமைகள் , சம்பந்தம் இல்லாமல் அதிகம் சிந்தித்தல் என நேரத்தைக் கடத்த முற்படுகிறார்கள் என்கின்றனர். இது காலப்போக்கில் மன நோயாக மாறலாம்.

அப்படியே சுற்றி வந்தால் திரைப்படங்கள் கூட இந்த பேச்சை விட்டு வைக்கவில்லை. காதல் தோல்வி என்றால் தனியாக வாழும் கதாப்பாத்திரங்களின் சித்தரிப்புகளும் முரட்டு single , Single தான் கெத்து என்ற வார்த்தைகளும் , “என் இனிய தனிமையே” என்ற பாடல் வரிகளும், “பொண்டாட்டி புள்ள மாமன் மச்சானு உறவுல வேகுறதுக்கு ஒரு கட்ட விறகுல வெந்துறலாம்” என்ற சூப்பர் ஸ்டார் போன்ற பிரபலமானவர்களின் வசனங்கள் கூட இதைத் தான் வலியுறுத்துகின்றன. ஆனால் அதை அலசிப் பார்த்தால் அவர்கள் ஒவ்வருத்தருக்கும் ஒரு குடும்பம் இருக்கிறது. அது புரியாமல் நாம் தான் அதை வாட்சப் ஸ்டேட்ஸ் ஆக வைத்து data மற்றும் time இரண்டையும் வீணாக்கி தனிமையில் சுற்றுகின்றோம்.

உண்மையை சொல்ல போனால் பரப்பரப்பாக செல்லும் இந்த வாழ்க்கையில் நமக்காக யோசிக்கவும், நம்மிடம் கரிசனை காட்டவும் ஓர் உறவு என்றும் அவசியமாகிறது. அப்படி ஓர் உறவை சரியாகக் கண்டு பிடித்தால் தனிமையை விட குடும்பம் எவ்வளவு அழகானது என்று தெரியும். நம் தெரிவில் தான் எல்லாமே தங்கி இருக்கின்றது. உண்மையில் தனிமையை விரும்புவர்கள் வாழ்வின் மீது பயம் கொண்டவர்கள் தான். ஒரு தடவை பயத்தை விடுத்து என்ன நடக்கிறது பார்ப்போம் என்று காலை வைத்தால் வாழ்வு எதிர்பார்க்காத சந்தோசத்தை கொடுக்கும். தனிமையில் ஒரு பிரச்சினையின் தீர்வினை பெறலாமே தவிர தனிமை ஒருபோதும் நம் பிரச்சினைக்குத் தீர்வில்லை என்பது மட்டும் நிதர்சனம்.



மும்பை

# முகேஷ் அம்பானியின் குடும்பத்தினருக்கு Z+ பாதுகாப்பு

இந்தியாவின் மிகவும் பிரபலமானவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு அந்நாட்டு உளவுத்துறை கொடுக்கும் தகவலின் அடிப்படையில் மத்திய அரசு பாதுகாப்பு வழங்கி வருகின்றது.

அந்த வகையில் இந்தியாவின் மிகப்பெரிய தொலைத்தொடர்பு நிறுவனமான ரிலையன்ஸ் (Reliance) குழுமத்தின் தலைவர் முகேஷ் அம்பானி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு மிக உயர்ந்த அளவிலான ‘Z+’ பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும்



‘Z+’ பாதுகாப்புக்கு ஆகும் செலவை முகேஷ் அம்பானியின் குடும்பத்தினரிடமே வசூலிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா

## அவுஸ்திரேலியாவில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் சுட்டுக்கொலை


அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில், உள்ள ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம்(28) தமிழ் நாட்டைச் சேர்ந்த ‘முகமது ரஹ்மதுல்லா சயது‘ என்ற 32 வயதான நபர் அந்நாட்டுப் பொலிஸாரால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவ தினத்தன்று குறித்த ரயில் நிலையத்திற்கு வந்த முகமது, அங்கிருந்த துய்மைப்பணியாளர் ஒருவர் மீது கத்திக்குத்துத் தாக்குதல் நடத்திய போதே இவ்வாறு பொலிஸாரினால் சுட்டுக்



கொல்லப்பட்டுள்ளார்.

இந்நிலையில் ”முகமது கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தியமைக்கான காரணம் என்ன?” என்பது குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



அஸ்ஸாம்

## முதல் பயணத்தை நிறைவு செய்தது ‘கங்கா’

நாட்டின் நீர்வழிப் போக்குவரத்தை ஊக்குவிக்கும் வகையில் ஆற்றில் பயணிக்கக் கூடிய உலகிலேயே மிகவும் நீளமான சொகுசு கப்பலை இந்திய அரசு கடந்த 13 ஆம் திகதி வாரணாசியில் அறிமுகப்படுத்தியிருந்தது.

அந்தவகையில் ‘ கங்கா விலாஸ்‘ என அழைக்கப்படும் இக்கப்பலானது 6 மாநிலங்கள் மற்றும் வங்கதேசத்தைக் கடந்து தீப்ருகரை நேற்று முன்தினம் வந்தடைந்து தனது முதல் பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்திருந்தது.

இதனையடுத்து 3,200 கிலோமீற்றர் தூரம் குறித்த கப்பலில் பயணித்த 28 வெளிநாட்டவருக்கு, மத்திய அமைச்சர் சர்பானந்தா சோனோவால் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் உற்சாக வரவேற்பு அளித்திருந்தனர்.

சுமார் 80 பயணிகள் பயணிக்க கூடிய இக் கப்பலின் மூலம் 50க்கும் மேற்பட்ட சுற்றுலாத்தலங்களை மக்கள் பார்வையிடலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருவள்ளூர்

## முதலிரவில் மணப்பெண் கொலை; கணவன் தற்கொலை

திருவள்ளூர் அருகே திருமணம் முடிந்து முதலிரவுக்கு சென்ற மணப்பெண்ணை, கணவர் கடப்பாரையால் அடித்து கொலை செய்த சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், காட்டூர் பகுதியைச் சேர்ந்த நீதிவாசன். இவருக்கும் அவரது உறவுக்கார பெண்ணான சந்தியாவுக்கும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருமணம் நடைபெற்றுள்ளது.

இந்நிலையில் இவர்களது முதலிரவு அன்று அதிகாலை 3 மணி அளவில் வேட்டி மட்டும் அணிந்திருந்த நீதிவாசன் உரக்க கத்தியவாறே முதலிரவு அறையில் இருந்து தப்பி ஓடியுள்ளான்.

இதனால் பதறியடித்து எழுந்த உறவினர்கள், முதலிரவு அறைக்குள் சென்று பார்த்த போது மணமகள் சந்தியா ஆடைகள் கலைந்த நிலையில் கடப்பாரையால் அடித்தும் , குத்தியும் கொடூரமாக கொலை செய்யப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

இதனையடுத்து இது குறித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் சந்தியாவின்



சடலத்தை மீட்டு உடற்கூராய்வுக்காக அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் காலை 7 மணியளவில் அருகிலுள்ள வயல்வெளியில் கழுத்தில் வேட்டி சுற்றப்பட்ட நிலையில் நீதிவாசனின் சடலத்தையும் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

இந்நிலையில் பொலிஸாரின் விசாரணையில் ”கடந்த சில ஆண்டுகளாக நீதிவாசன் மனநலம் பாதிக்கப்பட்டு அதற்காக சிகிச்சை எடுத்து வந்துள்ளார் என்பதும் கடந்த 3 மாதங்களாக அதற்கான மருந்துகளை அவர் எடுத்துக் கொள்ளவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

மேலும் திருமணம் செய்து வைத்தால் எல்லாம் சரியாகிவிடும் என உறவினர்கள் கூறியதைக் கேட்டு உறவுக்கார பெண்ணான சந்தியாவை நீதிவாசனுக்கு அவரது பெற்றோர் திருமணம் செய்து வைத்துள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது.

புதுடெல்லி

## பட்டப்பகலில் பலாத்காரம் செய்யப்பட்ட நாய்

இந்தியாவில் சமீபகாலமாக நாய், பூனை, பசு மாடு உள்ளிட்ட மிருகங்களிடம் மனிதர்கள் உறவுகொள்ளும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக, வடமாநிலங்களில்தான் இத்தகைய நிகழ்வுகள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் புதுடெல்லியில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் , பூங்கா ஒன்றில் 35 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் தெருநாய் ஒன்றைப் பிடித்து வலுக்கட்டாயமாக பலாத்காரம் செய்த சம்பவம் பெரும் மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்த வீடியோ காட்சிகள் சமூகவலை தளங்களில் வைரலானதைத் தொடர்ந்தே இக்கொடூர சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

சென்னை

## இந்தியாவின் ‘அமைதியான’ முதல் ரயில் நிலையம்

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையமானது கடந்த 26 ஆம் திகதியிலிருந்து இந்தியாவின் முதல் அமைதியான ரயில் நிலையமாக மாறியுள்ளது.

அதாவது சுமார் 150 வருடங்கள் பழமையான குறித்த ரயில் நிலையத்தில் ஒலிபெருக்கிகளில் அறிவிப்புகளைக் கொடுத்து வந்த முறை மாற்றப்பட்டு, விமான நிலையங்களில் பின்பற்றப்படுவது போல டிஜிட்டல் திரையில் ரயில்கள் குறித்த தகவல்கள், அறிவிப்புகளை வெளியிடும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதைத் தவிர மக்களுக்கு உதவ, உதவி மையங்களில் ஊழியர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர் எனவும், பல தரப்பட்ட மக்கள் சென்னையில் வசித்து வருவதனால், தமிழ், ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளில் ரயிலின் வருகை மற்றும் புறப்படும் தகவல்கள் திரையில் காட்சியளிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர, கண்பார்வையற்றோருக்கு ப்ரெயிலி மேப்கள் , மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் வகையில் க்யூ ஆர் கோட்கள் ஒட்டப்பட்டுள்ளன எனவும்,இவற்றை ஸ்கேன் செய்தால் தோன்றும் வீடியோவில் ரயில் குறித்த தகவல்கள் சைகை மொழியில்



அவர்களுக்கு விளக்கப்படும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் வெளியூர் செல்லும் ரயில்களுக்கு மாத்திரமே இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டு ள்ளதாகவும், மக்களின் வரவேற்பை பொறுத்தே நிரந்தர மாற்றத்தை கொண்டுவருவது குறித்து முடிவெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரீஸ்

# நேருக்குநேர் மோதிய ரயில்கள்: 36 பேர் உயிரிழப்பு

கிரீஸில் நேற்று முன்தினம் (28) சரக்கு ரயிலுடன் பயணிகள் ரயிலொன்று நேருக்கு நேர் மோதித் தடம் புரண்டதில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்தில் 36 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனவும் நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





சீனா

## சவப்பெட்டியை உடைத்து மண்டை ஓட்டுக்கு முத்தமிட்ட நபர்

சீனாவில் நபர் ஒருவர், பழமைவாய்ந்த மயானமொன்றில் அடக்கம் செய்யப்பட்டிருந்த சவப்பெட்டியை உடைத்து, அதிலிருந்த மண்டை ஓட்டுக்கு முத்தம் கொடுத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென் என்பவரே இவ்வாறு தனது இரு நண்பர்களுடன் சேர்ந்து,இச்செயலில் ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பான வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகவே கடந்த வருடம் இடம்பெற்ற இச்சம்பவம் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

இந்நிலையில் பொலிஸாரின் விசாரணையில் "சமூக வலைதளங்களில் கவனம் ஈர்க்கவே தான் தனது நண்பர்களுடன் இணைந்து இச்செயலில் ஈடுபட்டதாக சென் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த நபருக்கு 9 மாதம் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஹொங்கொங்

## 3 வருடங்களாக முகக்கவசம் அணிந்து சாதனை



உலகை அச்சுறுத்தி வந்த கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக உலக நாடுகள் பல, கடந்த காலங்களில் முகக் கவசம் அணிவதைக் கட்டாயப்படுத்தியிருந்தது.

எனினும் தற்போது கொரோனா அச்சம் நீங்கிய நிலையில் பல நாடுகள் முகக் கவசம் அணிவது குறித்த கட்டுப்பாடைத் தளர்த்தி வருகின்றன.

அந்தவகையில் ஹொங்கொங் அரசும் ,945 நாட்களுக்குப் பின்னர் தற்போது 'பொது இடங்களில் முகக் கவசம் கட்டாயம்' என்ற கட்டுப்பாட்டைத் தளர்த்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் " பொது இடங்களில் இனிமேல் முக கவசம் அணிவது கட்டாயம் இல்லை ,சுற்றுலா பயணிகள் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களை ஈர்க்கும் வகையில் இந்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



மெக்சிகோ

## இளைஞர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு

### 5 பேர் உயிரிழப்பு

தென்அமெரிக்க நாடான மெக்சிகோவில் வாகனத்தில் சென்ற இளைஞர்கள் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 5 பேர் உயிரிழந்ததோடு, ஒருவர் படுகாயம் அடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

மெக்சிகோ-அமெரிக்க எல்லையான நியூவோ லாரெடோ நகரில் நிகழ்ந்த இந்த துப்பாக்கிச்சூட்டிற்கான காரணம் தெரிவிக்கப்படாத நிலையில், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் இராணுவத்தினருடன் மோதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

துப்பாக்கிச்சூடு விவகாரம் குறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டுமென பல்வேறு அமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்கா

## மீண்டும் முதலிடத்தில் எலோன்



உலக பணக்காரர்கள் பட்டியலை ப்ளூம்பெர்க் நிறுவனம் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகின்றது.

அந்த வகையில் கடந்த வருடம் உலக பணக்காரர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருந்த எலான் மஸ்க் தன்னுடைய டெஸ்லா நிறுவனத்தின் பங்குகளில் ஏற்பட்ட சரிவு காரணமாக இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அதே டெஸ்லா நிறுவனத்தின் பங்குகளில் ஏற்பட்ட எழுச்சியினால் 187 பில்லியன் டொர்லர்களுடன் மீண்டும் உலக பணக்காரர்கள் பட்டியலில் முதலாம் இடத்தை எலான் மஸ்க் பிடித்துள்ளார்.

இப்பட்டியலில் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த எம்.வி.எம்.ஹச் நிறுவனத்தின் தலைவரான பெர்னார்ட் அர்னால்ட் 185 பில்லியன் டொலர்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




பாகிஸ்தான்

## நடுவர்களுக்கு பிரியாணி கொடுத்ததால் பரபரப்பு

பாகிஸ்தானிலுள்ள பிரபல தொலைக்காட்சியொன்றில் 'தி கிச்சன் மாஸ்டர் ' என்ற பிரபல சமையல் போட்டி நிகழ்ச்சியொன்று நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் குறித்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போட்டியாளர் ஒருவர் பிரபல கடையிலிருந்து வாங்கி வந்த பிரியாணியை நடுவர்களுக்கு கொடுத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து குறித்த போட்டியாளரை நடுவர்கள் நிராகரித்துள்ள நிலையில் ஆத்திரமடைந்த போட்டியாளர் "இந்த நிகழ்ச்சியில் நடுவர்கள் ருசிப்பதற்காக வழங்கப்படும் உணவானது நீங்கள் தயாரித்ததாக இருக்க வேண்டும் என யாரும் என்னிடம் கூறவில்லை. அதனால் தான் நான் இந்த பிரியாணி பார்சலை வாங்கி வந்தேன்.


இதனை வாங்குவதற்கு நான் வெகு நேரமாக வரிசையில் நின்று கடுமையாக உழைத்து உள்ளேன்" என்று கருத்து தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் குறித்த நிகழ்ச்சியிலிருந்து வெளியேற மறுத்ததால் அவருக்கும் நடுவர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இம்மோதலையடுத்து நடுவர்களில் ஒருவர் ஆத்திரமடைந்து நிகழ்ச்சியை விட்டு வெளியேறியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்

## 90 நாட்களுக்குள் தேர்தல்: உச்ச நீதிமன்றம் தீர்ப்பு




எதிர்வரும் 90 நாட்களுக்கு தேர்தலை நடத்துமாறு பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பஞ்சாப் மற்றும் கைபர் பக்துன்க்வா மாகாண சபைகளுக்கான தேர்தலையே 90 நாட்களுக்குள் நடத்த வேண்டுமென பாகிஸ்தான் உச்ச நீதமன்றம் தீர்ப்பளித்துள்ளார்.

நீதியரசர் உமர் அத்தா பண்டியல் தலைமையிலான ஐவர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு இன்று (01) இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

பாகிஸ்தானில் மாநிலத் தேர்தல்கள் நடத்தப்படுவதில் போதிய பணம் இல்லை என்று நிதி அமைச்சகம் தேர்தல் ஆணையத்திடம் தெரிவித்ததால், மாநிலத் தேர்தல்கள் தொடர்ந்து தாமதமாகின என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# 109 ஓட்டங்களுடன் சுருண்ட இந்தியா

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டின் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களையே இந்தியா பெற்றுள்ளது.

நான்கு போட்டிகள் கொண்ட இத்தொடரில், இந்தூரில் நேற்று ஆரம்பித்த இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியாவின் அணித்தலைவர் றோஹித் ஷர்மா, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 109 ஓட்டங்களையே பெற்றது.

பந்துவீச்சில், மத்தியூ கூனுமென் 5, நேதன் லையன் 3, டொட் மேர்பி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.





கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய விளையாட்டுப் போட்டி:

## பெண்களுக்கான எல்லேயில் சம்பியனான அரபா இல்லம்

கியாஸ் ஷாபி

கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில், பெண்களுக்கான எல்லேயில் அரபா இல்லம் சம்பியனானது.

பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற பெண்களுக்கான எல்லேயின் முதலாவது போட்டியில் சபா இல்ல அணியை எதிர்த்தாடிய அரபா இல்ல அணி 5-1 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் இலகுவாக நுழைந்தது.

இறுதிப் போட்டியில், மினா இல்ல அணியை 1-0 என்ற புள்ளி அடிப்படையில் வென்று சம்பியனானது.

இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக அரபா இல்லத்தைச் சேர்ந்த எல். இல்மா தெரிவு செய்யப்பட்டார்.

## கால்பந்தாட்ட நிர்வாக சபையிலிருந்து இதுவரை நால்வர் இராஜினாமா

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தற்போதைய நிர்வாக சபையில் இருந்து நான்கு பேர் இராஜினாமா செய்துள்ளனர்.

முதலில் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் செயலாளர் இந்திக்க தேனுவர தனது இராஜினாமா கடிதத்தை அதன் தலைவர் ஸ்ரீ ரங்காவுக்கு அனுப்பியுள்ளார். கால்பந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவர்களான சி. தீபிகா குமாரி, சமன் தில்ஹான் நாகஹவத்த ஆகியோரும் தமது இராஜினாமா கடிதங்களை சமர்ப்பித்துள்ளனர். மேலும், சம்மேளனத்தின் பொருளாளர் டி. சுதாகரும் தனது இராஜினாமா கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

இவ்வாண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று சபையின் பெரும்பான்மையானவர்கள் இராஜினாமா செய்ததன் காரணமாக கால்பந்தாட்ட சம்மேளனத்தின் செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

நிர்வாக சபை உறுப்பினர்களின் பதவி விலகல் காரணமாக கோரம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், இதனால் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் செயற்பாடுகளை பேண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கால்பந்து சம்மேளனத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 11 ஆக இருந்தாலும், ஜனவரி 14 அன்று 8 பேர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டனர். குறைந்தபட்ச கோரத்தை பராமரிக்க ஆறு நிர்வாக உறுப்பினர்கள் தேவை, மேலும் 4 உறுப்பினர்கள்இ ராஜினாமா செய்ததால், இப்போது நான்கு பேர் மட்டுமே உள்ளனர்.




மன்னார் அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையின் பழைய மாணவர்

## கிரிக்கெட் தொடரில் சம்பியனான 2018 O/L அணி

எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பழைய மாணவர்களுக்கான மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் 2018 o/l அணி சம்பியனானது.

24 அணிகள் கலந்து கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியானது பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றபோது 2003 o/l அணியை வென்றே 2018 o/l அணி சம்பியனானது.




மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

## 342 ஓட்டங்களைப் பெற்ற தென்னாபிரிக்கா

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், செஞ்சூரியனில் நேற்று முன்தினம் ஆரம்பித்த முதலாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 342 ஓட்டங்களை நேற்று பெற்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா: 342/10

(துடுப்பாட்டம்: ஏய்டன் மார்க்ரம் 115, டீன் எல்கர் 71 ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 5/81, கைல் மேயர்ஸ் 1/23, ஷனொன் கப்ரியல் 1/49, ஜேஸன் ஹோல்டர் 1/64, கேமார் றோச் 1/71)



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 02 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.